www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G P

# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 40 | 15 வைகாசி 1998 | விலை: ரூபா 7.00

# ஒட்டுண்ணுவின் விஜயம் அமைதிக்கு வித்திடுமா?





விசாகப்பெருமாள், (E.P.R.L.F.)



ஜி.ரி.லிங்கநாதன் (P.L.O.T.E.)



அபூ யூசுப் (T.E.L.O.)



தமிழ்ச்செல்வன் (L.T.T.E.)



அன்ரன்பாலசிங்கம் (L.T.T.E.)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபிஅனான் அவர்களின் விசேட தூதுவர் ஒலாரா ஒட்டுண்ணு சென்ற வாரம் இலங்கை வந்திருந்தார். ஆயுத மோதல்களில் சிறுவர்கள் பயன்படுத்தப்படுவது குறித்து ஆராய்வதே தனது இலங்கை விஜயத்தின் நோக்கம் என அவர் கூறியிருந்தார்.

யுத்தத்தில் ஈடுபடுபவர்கள், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரை அவர் சந்தித்து பேசியுள்ளார். தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், மற்றும் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் எனப் பல்வேறு தரப்பினரது அபிப்பிராயங்களையும், கருத்துக்களையும் அறிந்து கொள்வதில் அவர் ஆர்வம் காட்டிச்சென்றுள்ளார்.

சிறுவர்கள் போரில் ஈடுபடுத்தப்படுவது குறித்து ஆராய்வதற்காக வந்ததாக அவர் கூறியபோதும், அவரைச் சந்தித்தவர்கள் தமிழர் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண உதவவேண்டும் என்றே வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

துணுக்காயில் உள்ள புலிகளின் அரசியல் துறைச் செயலகத்தில் ஐ.நா. பிரதிநிதி ஒலாரா ஒட்டுண்ணுவை சந்தித்த அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் ஆகியோர், சிறிலங்கா அரசு நடத்திய யுத்தத்தில் சிறுவர்கள் மட்டுமன்றி தமிழ் மக்கள் அனைவரும் பெரும் அழிவையும் அவலத்தையும் எதிர்நோக்கி வருவதாகக் கூறியுள்ளனர்.

யுத்தம் முடிவுக்கு வரும்வரை போரினால் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முற்றுமுழுதாகத் தீர்வு கண்டுவிட முடியாதென்பதே உண்மை.

ஐ.நா. பிரதிநிதியும் இதனை உணர்ந்து கொண்டதனாலோ. என்னவோ சிறுவர்களின் பிரச்சினைகளுக்கு அப்பாலும் தனது பார்வையைச் செலுத்தியுள்ளார்.

முஸ்லீம் மக்கள் வடபகுதிக்குத் திரும்பிச்செல்ல புலிகள் தடையாக இல்லை எனவும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்லத் தடையேதும் விதிக்கவில்லை எனவும் புலிகள் ஒலாரா ஒட்டுண்ணுவிற்குப் பதிலளித்துள்ளனர். இது சிறுவர்களின் பிரச்சினைகளுக்கு அப்பாலும் ஐ.நா. பிரதிநிதி கவனம் செலுத்தியிருப்பதனையே எடுத்துக்காட்டுகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் உள்ள மக்களுக்கு உணவு, சுகாதார வசதிகள், போன்ற மனிதாபிமான உதவிகள் வழங்கப்படும்போது, புலிகள் அதற்கு இடையூறாக இருக்கக் கூடாது எனவும், தரைக்கண்ணிகளை உபயோகிப்பதை அரசும் புலிகளும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் ஐ.நா. பிரதிநிதி ஒலாரா ஒட்டுண்ணு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவை, சிறுவர்களின் பிரச்சினைகளுக்கு அப்பால் சமாதான முயற்சிகளின் முதற்படியாக, மூன்றாவது தரப்பின் தலையீட்டுக்கான அடையாளமாக கொள்ளலாமா?

ஐ.நா. பிரதிநிதியின் வருகையை ஒட்டி தாமாகவே அறிவித்த யுத்தநிறுத்தத்தை புலிகளால் கடைப்பிடிக்க முடியவில்லை. புலிகள் தனக்களித்த உறுதிமொழிகளை செயலில் காட்டுவார்கள் என்ற நம்பிக்கையுடன் சென்றுள்ள ஒலாரா ஒட்டுண்ணுவுக்கு புலிகள் நம்பிக்கையாக நடந்து கொள்வார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளவர்களாகட்டும், புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளவர்களாகட்டும் அனைவரதும் அவா சமாதானம் என்று தெரிவித்துள்ள ஒலாரா ஒட்டுண்ணு, சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட அரசோ புலிகளோ விருப்பம் வெளியிடவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்து சமாதானம் மலர வேண்டுமானால், அரசு சார்பற்ற நிறுவனங்கள், வெகுஜனத் தொடர்பு சாதனங்கள், பொதுமக்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்பதே அவர் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் செய்தி.



# நெஞ்சு பொறுக்குதில்லையே...

கொழும்பு வந்துள்ள இலங்கைக்கான முன்னாள் இந்தியத தூதுவரும் தற்போதைய இந்திய ஆளும்கட்சியின் வெளிவிவகாரங்களுக்கான ஆலோசகருமான என்.என். ஜா அவர்களை கொழும்பு தமிழர் பணிக் குழு கடந்த 24.04.98அன்று கொழும்பு ஒபரோய் ஹோட்டலில் சந்தித்து தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு எடுக்கப்பட வேண்டிய முயற்சிகள் குறித்தும் எடுத்துக் கூறியுள்ளதை பத்திரிகைச் செய்திகள் மூலம் அறிய முடிகிறது.

தமிழ்மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் தொடர்பாக அவர்கள் குறிப்பிட்டுள்ள விடயங்களுடன் அபிப்பிராய பேதமில்லை. தமிழ்க் கட்சிகள் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள், தூதுவர்களைச் சந்தித்த பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சுட்டிக்காட்டிய விடயங்களே அவை.

தமிழ் மக்களினது அரசியல் நிலைப்பாடு தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் உண்மைக்கு மாறானவை என்பதையே சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இனப்பிரச்சினை தொடர்பாக, தீர்வு தொடர்பாக, ஏன் விடுதலைப் புலிகள் தொடர்பாகக்கூட தமிழர் பணிக்குழுவுக்கு ஒரு கருத்து இருக்கும். அதனை வெளியிடுவதற்கு அவர்களுக்கு சுதந்திரம்உண்டு. ஆனால், அதுவே ஒட்டுமொத்தமான தமிழர்களின் கருத்து ஆகிவிடாது.

பொய்ப் பிரச்சாரங்களில் ஈடுபடுவதாக அரசைக் குற்றம்சாட்டும் தமிழர் பணிக்குழு, அரசின் பிரச்சாரத்திற்கு நேர் எதிரான மற்றொரு தவறான பிரச்சாரத்தில் ஈடுபடுவது வேதனைக்குரியது. விடுதலைப் புலிகள் ஓர் பயங்கரவாத இயக்கம் எனவும் அரசுக்கு தமிழ்மக்களின் ஆதரவு உண்டு எனவும் அரசாங்கம் பொய்ப் பிரச்சாரம் செய்வதாக தெரிவிக்கும் தமிழர் பணிக்குழுவினர் தமிழ் கட்சிகளுக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்கி வருவதாக கூறுவது முற்றிலும் தவறான பிரச்சாரம் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் பயங்கரவாத இயக்கமா? இல்லையா? என்பதனை இந்த இடத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ள இந்தியாவின் முன்னாள் தூதுவருக்கு இதுபற்றி வெளியிலிருந்துதான் யாராவது சொல்லவேண்டுமா? இதுபற்றி கருத்து சொல்லமுற்பட்டு இந்திய தூதுவருக்கும், மக்களுக்கும் தம்மை அடையாளம் காட்டிக் கொண்ட தமிழர் பணிக்குழுவுக்கு நன்றி உடையவர்களாவோம்.

தமிழ் கட்சிகளுக்கு தமிழ் மக்களிடம் ஆதரவில்லை என்ற தமிழர் பணிக்குழுவின் கூற்று

(தொடர்ச்சி 3ம் பக்கம்) ☞

படிப்பகம்

www.padippakam.com



கண்ணோட்டம்

# குற்றவாளிக் கூண்டில் தமிழ் மக்கள்!

ஒருபக்கம் அமெரிக்க ராஜதந்திரிகளின் கொழும்பு வருகை, பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் கொழும்பு வருகை, இவற்றுடன் சம்பந்தப்படுத்தி பேச்சுவார்த்தைக்கான சில முஸ்தீபுகள் நடைபெறுவதாக மக்கள் பத்தியில் உலவும் வதந்திகள். மறுபுறம் கண்டி வீதியைத் திறப்பதற்கான யுத்தம். இவை இரண்டுக்கும் அப்பால் 'சங்கிலியன் படை' என்ற பெயரில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும், பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் வரும் மிரட்டல் கடிதங்கள். இப்படியான குழறுபடி சூழலுக்குள்தான் இன்று இலங்கை அரசியல் உள்ளது.

இருபது வருட யுத்த சகதிக்குள் நாடு மூழ்கடிக்கப்பட்டிருக்கும்போது மக்களின் மனோநிலைபற்றியோ, அவர்களது உணர்வுகள்பற்றியோ யாரும் சிந்திப்பதாக இல்லை. யுத்தத்தை நிறுத்திப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்றைக் காண வேண்டும் என்ற நோக்கம் எந்தப் பகுதியிலும் இருப்பதாகத் தெரியவில்லை. மக்களுக்கும் ஏனைய இயக்கத்தவர்களுக்கும், மரண தண்டனைகளை நிறைவேற்றுவதென்பதுதான் இன்று முன்னுரிமை கொடுக்கப்பட்ட விடயமாக உள்ளது.

'சங்கிலியன் படை' என்ற பெயரில் அனுப்பப்பட்ட கடிதத்தில் மக்கள் இராணுவத்துடன் பேசக் கூடாதென்பதும், ஏனைய இயக்க அலுவலகங்களுக்கு போகக்கூடாதென்பதும், அரசாங்க உத்தியோகத்தர், இராணுவத்துடன் பேசக் கூடாதென்பதும் அவர்களது உத்தரவுகளில் சில. அதே சமயம் புலிகள் தடை செய்யப்பட்ட இயக்கம், எனவே மக்கள் யாரும் புலிகளுடன் பேச்சுவார்த்தை வைத்திருக்கக் கூடாது என்பது அரசாங்கத்தின் உத்தரவு. இந்த உத்தரவுகளை இவர்கள் நடைமுறைப் படுத்துவதாக இருந்தால், முழுத் தமிழ்ச் சமுதாயத்துக்கும், இவர்கள் மரணதண்டனை நிறைவேற்றுவார்கள் என்பதே அர்த்தம்.

1990 – 1995க்கு இடைப்பட்ட காலத்தில் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தபோது, முழுத் தமிழ் மக்களிடமும் போராட்ட நிதி, மண்மீட்பு நிதியென வசூலித்தார்கள். அத்துடன் யாழிலிருந்து வெளியில் செல்லும் எவரும் புலிகளின் அனுமதி பெற்றே செல்லவேண்டி இருந்தது. அப்படியாயின் இராணுவத்தின் பார்வையில் மக்கள் எல்லோரும் புலிகளா? என்ற கேள்வி எழும். அதே போல் இன்று வன்னியில் வாழும் மக்கள், கிழக்கு மகாணத்தின் பல பகுதிகளில் வாழும் மக்களும் புலிகளுக்கு பணம் கொடுக்க வேண்டும் என்ற சூழ்நிலை உள்ளது. அப்படியாயின், அத்தனை மக்களையும் அரசாங்கம் தண்டனைக்குள்ளாக்கப் போகின்றதா?

இதேபோல்தான் சங்கிலியன் படையின் மிரட்டல் கடிதமும். இராணுவத்துடன் பேசாமல் மக்களால் அன்றாடப் பிரச்சினைகளையே கவனிக்க முடியாதென்ற சூழ்நிலை. எந்த விடயத்துக்கும் இராணுவத்திடம்தான் செல்ல வேண்டும். அதுமாத்திரமல்ல, ஒரு தொலைபேசி எடுக்க, ஓர் செய்தியை அனுப்ப, வேலைவாய்ப்புகள், இடமாற்றங்கள் எனப் பல விசயங்களுக்கு தமிழ்க் கட்சிகளிடம் போக வேண்டிய சூழ்நிலை. அப்படியாயின் இவர்கள் எல்லோரும் துரோகிகளா? என்ன அடிப்படையில் இந்த மிரட்டல் கடிதங்கள் எழுதப்படுகின்றன என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம்.

விடுதலைப் போராட்டம் என்பது முழு மக்களின் ஒத்துழைப்புடன், அவர்களின் பங்களிப்புடன் நடப்பதே தவிர, அவர்களை மிரட்டி ஆதரவைக் கோருவதென்பதல்ல. தமிழ் மக்களில் மிகப் பெரும்பகுதி தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரித்தவர்கள்தான். ஆனால் இன்று அந்த நிலையில்லை. 20வருடப் போராட்டத்தில் உற்றார், உறவினர், சுற்றத்தார் எனப் பலரை இழந்தும், வாழ்க்கை பூராக அவர்கள் தேடிய சொத்துக்களை இழந்தும், இன்று மிகவும் ஏழ்மையான நிலையில் நொந்து போயுள்ளார்கள். மறுபுறத்தில் இந்த யுத்தத்தால் பல லட்சம் மக்கள் அகதிகளாக வெளிநாடுகளில் தஞ்சமடைந்தார்கள். அவர்களது உதவி இல்லையென்றால் பட்டினிக் கொடுமையால் சாகும் பலரை இன்று நாம் பார்த்திருப்போம்.

24மணி நேரத்தில் அகதிகளாகிப் போன மக்கள் இப்பொழுதுதான் சிறுகச் சிறுக மீளக்குடியேறிக் கொண்டிருக்கின்றார்கள். இக்குடியேற்றங்களைத் தடைசெய்வதுதான் இம்மிரட்டலின் நோக்கமா? மிக நீண்டகாலத்திற்குப் பிறகு, பாழ்ப்பாணத்தில் மின்சாரமும், தொலைபேசி வசதியும் சொற்ப அளவில் கிடைக்கத் தொடங்கியுள்ளது. இவற்றை சீர்குலைப்பதென்பதுதான் இம்மிரட்டலின் பொருளா? விடுதலைக்காகப் போராடுபவர்களுக்கு இப்படியான வசதிகள் கூட இருக்கக் கூடாது என்பதுதான் மிரட்டுபவர்களின் கொள்கையா? மக்கள் அமைதியை, சமாதானத்தை விரும்புகின்றார்கள் என்பது இவர்களுக்குப் புரியவில்லையா? எவ்வளவு காலத்திற்கு மக்களை மிரட்டலுக்கும் அச்சுறுத்தலுக்குள்ளும் வைத்திருக்க முடியும்.

இன்றையதேவை மிரட்டல்களோஅச்சுறுத்தல்களோ அல்ல. இன்றைய தேவை, சகல தமிழ் கட்சிகளுக்குள்ளும் ஐக்கியம்; தமிழ் மக்களுக்கான ஜனநாயகம்; சகலரது பிழைகளையும் சுட்டிக்காட்டும் வலு எமது மக்களுக்கு ஏற்படவேண்டும். அப்பொழுதுதான் அரசாங்கத்தின் யுத்தத்திற்கெதிராக மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டலாம். தமிழ்மக்களுக்கு என்ன தேவை என்பதை அவர்கள் வலியுறுத்தலாம். அதற்கான களம் தான் இன்று தேவையே தவிர, மக்களை அச்சுறுத்தி அவர்களது வாயை மூடி அவர்களை மௌனிகளாக்குவது புலிகள் விடும் பெரும் தவறாகும்.

# வவுனியாவில்...


ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அனுசரணையுடன் ஜனநாயக மாணவர் மன்றத்தினரும், 'நியூபேட்ஸ்' விளையாட்டுக் கழகத்தினரும் இணைந்து நடத்திய மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி ஒன்று அண்மையில் வைரவ புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தில் நடைபெற்றது. போட்டிகளில் இருபத்திமூன்று விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.



போட்டிகளின் இறுதி நாளான 11.04.98 அன்று, வெற்றிபெற்ற விளையாட்டுக் குழுக்களுக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கும் விழா நடைபெற்றது. இவ்வைபவத்தில் வைரவ புளியங்குளம் கிராம அதிகாரி முத்துராஜா மற்றும் முன்னாள் கிராம அதிகாரி திரு. ஆனந்தன், தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தைச் சார்ந்த திரு. குகன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வவுனியா மாவட்ட செயலாளர் சிவசக்தி ஆனந்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் விளையாட்டுக்கழக ஊக்குவிப்பாளர் திரு. ஸ்ரனிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

"இளைஞர்களின் விளையாட்டு ஊக்குவிப்பிற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் இப்படியான செயற்பாடுகளில் இறங்கியிருப்பதையிட்டு அவர்களை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது" என முன்னாள் கிராம சேவையாளர் திரு. ஆனந்தன் அவர்கள் உரையாற்றும் போது கூறினார். "விளையாட்டுக்களின் மூலம் ஒற்றுமையை வளர்க்க முடியும். இதன்மூலம் நல்லதோர் சமூகத்தைக் கட்டியெழுப்பமுடியும்" என திரு. முத்துராஜா அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வவுனியா மாவட்டச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் அவர்கள், "இளைஞர்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டுமெனவும், அதற்கு இப்படிப்பட்ட விளையாட்டுக்கள் உதவியாகவும் ஒரு ஊடகமாகவும் இருக்குமென்ற நம்பிக்கையிலேயே நாங்கள் இவர்களை ஊக்குவிக்கின்றோம் எனவும், தொடர்ந்தும் ஊக்குவிக்கத் தயாராக இருக்கின்றோம்" எனவும் கூறினார்.

பாரதிபுரம் விளையாட்டு மைதானம், கோயில் என்பவற்றைப் புனரமைக்கும் பணிகளில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர்கள்.





சமயபுரம் கிராம வீதி புனரமைப்பு சிரமதானப் பணிகளில் தோழர்கள்.

19.04.98 அன்று சமயபுரம் கிராமத்தில், கிராம மக்களுடன் இணைந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர்கள் சிரமதானப் பணிகளில்.



## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது. அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-22398

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-22724

உப்புக்குளம் வீதி, மன்னார்.
☎ 023-2370

Post Bag: 1041,
Madras-17,
India.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

310, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021-2022

E.P.I.C., Box No: 95,
95144, GargesLes,
Gonnesse Cedex,
France.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

படிப்பகம்

## இனிய தமிழ் மக்களே!...

www.padippakam.com



### அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

# அச்சத்தை விட்டு அணி திரள்வோம்!

யாழ் குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்து ஏறத்தாழ மூன்று வருடங்களாகின்றன. ஆனால் யாழ் மாவட்டத்தின் அபிவிருத்தி என்பது இன்னும் மந்த கதியிலேயே நடைபெறுகின்றது.

விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்கள் ஓரளவு ஆரம்பிக்கப்பட்டாலும், அவ்விளை பொருட்களைச் சந்தைப்படுத்துவதென்பது இயலாத காரியமாக உள்ளது. யாழ்ப்பாணத்துக்கும் ஏனைய மாவட்டங்களுக்கான வீதிப் போக்குவரத்து இல்லாதமையால், யாழில் இருந்து எந்த விளைபொருட்களையும், வெளியில் கொண்டு செல்ல முடியாமல் உள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கடல்வழி மூலம் பொருட்கள் வருகின்றன. இதற்கானபணமும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வருகின்றது. ஆனால் யாழ் பொருட்கள் கொழும்புக்கு வராததால் அது மிகவும் குறுகிய உள்ளூர்ச் சந்தையையே நம்பியிருக்கவேண்டி உள்ளது. இதனால் விவசாயிகளும் மீனவர்களும், எவ்வளவு



தமது இனத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்படுவதையே கண்டு கொள்ளாதவர்கள், எவ்வாறு தமிழ்மக்கள் மேல் பரிவு கொள்வார்கள்?

தான் கஷ்டப்பட்டபோதும் அவர்களது வாழ்க்கைத் தரம் சிறிதளவுகூட முன்னேற முடியவில்லை என்பதே உண்மை.

மட்டுப்படுத்தப்பட்ட நேரத்துக்கும், மட்டுப்படுத்தப்பட்ட எல்லைக்குள்ளேயும் மாத்திரமே மீன்பிடிக்கலாம். ஆனால் அதற்கான சந்தை வாய்ப்பில்லை. அதேபோல், ஜொனி வெடிகள், கண்ணிவெடிகள் என்ற அச்சத்துக்குள்ளும், அருகில் இருக்கும் தோட்டத்திற்கு கூட 5மைல் சுற்றிவந்தே விவசாயம் செய்யலாம் என்ற நிலைமை.

இப்படிக் கஷ்டப்பட்டுக்கூட இவர்களாலும், தமது பொருட்களைச் சந்தைப்படுத்த முடியாது. இதனைப் போன்றே தொழிற்சாலைகளை மீளத் திறக்க முடியாத நிலைமை, வீதிகளை முழுமையாகப் புனரமைக்க முடியாத நிலைமை.

கட்டடப் பொருட்களுக்கு பலத்த தட்டுப்பாடு, அப்படிக் கிடைத்தாலும் ஆனை விலை குதிரை விலை. இவை மாற்றமடைய வேண்டுமெனில் யாழ்ப்பாணத்துக்கும், ஏனைய பகுதிகளுக்குமான வீதிப் போக்குவரத்து அவசியமானதாகும்.

வீதியைத் திறக்க அனுமதிக்கப்படுமாயின் அது இராணுவத்துக்கு வெற்றியாகிவிடும், அது மறுபுறத்தில் புலிகளின் போராட்டத்தை பலவீனப்படுத்தி விடலாம் என யாரும் கருதக்கூடும். அது உண்மையும் கூட. அப்படியாயின். மறுபுறத்தில் நாம் இன்னும் எவ்வளவு நாட்களுக்கு இந்த யுத்தத்தைத் தொடரப் போகின்றோம்?

ஸ்ரீலங்கா இராணுவத்தைப் பொறுத்த வரையில் வெற்றி தோல்விக்கு அப்பால் யுத்தத்தை தொடர்ந்து நடாத்துவது அவர்களுக்கு சங்கடமான விடயமல்ல. ஏனெனில் யுத்தம் என்பது பாரியதோர் தொழிலாக வளர்ச்சி அடைந்துள்ளது.

அடிமட்டத்தில் இருக்கும் சாதாரண சிப்பாய்கள் சாவதைப்பற்றி யாரும் அலட்டிக் கொள்வதில்லை. அதேபோல் எத்தனை யுத்த விமானங்கள் வீழ்ந்தன, ஹெலிகொப்டர்கள் நொருங்கின, எத்தனை யுத்தக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன என்பது வரலாற்றுக்கு உதவலாமே தவிர, இதனால் அரசோ, இராணுவமோ கவலைப்படுவதாக இல்லை.

எத்தனை இராணுவ சாதனங்கள் இல்லாமல் போகின்றனவோ, அவற்றுக்குப் பதிலீடாக அதிலும்விட அதிக பொருட்கள் தொடர்ந்து வாங்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இவற்றினால், அரசியல்வாதிகளும், முப்படைகளின் உயர் அதிகாரிகளும் கோடீஸ்வரராக மாறிவருகின்றார்கள்.

யுத்தம்கூட ஒரு பெரிய வியாபாரமாக மாறிவிட்டதென்பதே உண்மை. புலிகளுக்கு உதவுபவர்கள்தான், அரசுக்கும் ஆயுத உதவி செய்கின்றார்கள். எனவே தமிழ் மக்களின்மேல் பரிவு கொண்டு அரசு யுத்தத்தை நிறுத்தும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

தமது இனத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்படுவதையே கண்டு கொள்ளாதவர்கள், எவ்வாறு தமிழ்மக்கள் மேல் பரிவு கொள்வார்கள்? யுத்தம் எவ்வளவு காலம் நீடிக்கின்றதோ அவ்வளவிற்கு அவர்கள் உழைக்கலாம்.

எனவே புலிகளின் பலத்த தாக்குதல்களால் இராணுவம் பலவீனமடைந்துவிடும், அதன் மூலம் இராணுவத்தை வெற்றி கொண்டுவிடலாம் என்றால், அது ஒர்பிழையான கருத்தாகும்.

இந்நிலையில் தமிழ்மக்களின் விடுதலைக்காகப் போராட வெளிக்கிட்டோர்தான் தமிழ் மக்களின் நலன்கள் பற்றிச் சிந்திக்க வேண்டும். யுத்தம் தொடர்வதால் தமிழ் மக்களுக்கு என்ன இலாபம் ஏற்படப் போகின்றது? தமிழீழமோஅல்லது தனிநாடோ கிடைத்துவிடுமா? மாறாக துன்பத்திற்குமேல் துன்பம்தானே.

எவ்வளவு சீரழிவுகள்? கலாசாரச் சீரழிவு, கல்விச் சீரழிவு, சுகாதாரச்சீரழிவு...மொத்தத்தில் வாழ்க்கையே சீரழிந்துள்ளது. இந்நிலை தொடர்வது யாருக்கு இலாபம்?

*அன்பிற்கினியதமிழ்மக்களே!*

சற்று சிந்தித்துப் பாருங்கள். தென்பகுதி (சிங்களப் பகுதி) எவ்வளவு வளர்ச்சிஅடைந்துள்ளது, நாம்எங்கே நிற்கின்றோம்? மின்சாரம் இல்லாமல், தொலைபேசி இல்லாமல், கல்வித் தரம் தாழ்ந்து, கற்காலத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறோம்.

பல நாடுகளில் பல போராட்டங்கள் நடந்தன. ஆனால் அவை யாவற்றுக்கும் ஓர் தீர்வு ஏற்பட்டது. ஆனால் எமதுநாட்டில் எல்லை இல்லாத யுத்தம்தான் தீர்வா?

தீர்வு எமக்குத் தேவை எனும்பொழுது, நாம்தான் முன்முயற்சிஎடுக்க வேண்டும். நாம்தான் எமது தேவைகளை வெளிப்படுத்த வேண்டும்.

பேச்சுவார்த்தையிலும், கௌரவமான தீர்விலும் நம்பிக்கை உள்ளவர்கள்என்பதை நாம் வெளிப்படுத்த வேண்டும். அரசு பிழை விடுகின்றது என அதன் மேல் தொடர்ந்து குற்றங்களைச் சுமத்துவதில் அர்த்தமில்லை.

அரசாங்கம் பெயரளவிலாவது சில முயற்சிகள் எடுத்து, அதனை புலிகள் குழப்பிவிட்டார்கள் என்பதுதான் வரலாறும், சர்வதேசக் கருத்துமாகும்.

இந்நிலையில், நாம் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை உள்ளோர் என்பதை உணர்த்துவது எமது கடமையாகும். ஆகவே எமது தரப்பில் இருந்து உறுதியான முன்முயற்சிகள் தேவை. நாம் படும் துன்பம் நமக்கு மட்டும்தான் தெரியும். ●

தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர வேண்டும் என்ற விருப்பம் ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி உட்பட எல்லாத் தமிழ்மக்களுக்கும் இருந்தபொழுதும் கூட இயக்கங்கள் மத்தியில் ஐக்கியத்தை உருவாக்குவது கல்லில்நார் உரிப்பதைப் போன்ற கதைதான்.

கூட்டணி, ஈ.பி.டி.பி. போன்ற கட்சியினருக்கு மக்கள் நலன்களிலும்விட கட்சியின் நலனே முக்கியமாக உள்ளது. இவர்களுக்கெல்லாம் உங்களது வாக்குகள் தேவையே தவிர, உங்களது வளமான எதிர்கால வாழ்க்கை அல்ல. வாக்குகளைப் பெறுவதற்கான சில சலுகைகளை அவ்வப்பொழுது செய்வார்களேதவிர தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர முன்முயற்சி எடுப்பார்கள் என நம்பவில்லை.

எனவேதான் சகல தமிழ் மக்களுக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறைகூவல் விடுக்கின்றது. உங்கள் உரிமைகட்காக, உங்கள் விடிவுக்காக, உங்கள்எதிர்காலத்திற்காக நீங்கள்தான் போராடவேண்டும், உங்களுடன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தோளோடு தோள் நிற்கும்.

எந்தப் போராட்டத்திலும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன் வரிசையில் வரும். நாம் எல்லோரும் இணைந்தால் ஏனையோரும் எம்முடன் இணைவார்கள் என்பதைக் கூறி, அச்சத்தை விட்டு அணி திரள்வோம் என அறைகூவல் விடுக்கின்றோம். ●

## நெஞ்சு...

(முன்பக்கத் தொடர்ச்சி)

அரசின் பிரச்சாரம் போன்றே உள்நோக்கம் கொண்டது. உண்மைக்கு புறம்பானது என்பதையே இங்கு நாம் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

யாழ்மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் பல்வேறு அச்சுறுத்தல்கள் கோரிக்கைளையும் மீறி, ஏறத்தாழ 91758 பேர் அங்கு போட்டியிட்ட தமிழ்க்கட்சிகளுக்கு வாக்களித்துள்ளனர்.

இந்த மக்களின் மன உணர்வுகளை தமிழர் பணிக்குழு ஏன் மூடிமறைக்க முயல்கிறது. இந்த தேர்தலில் தில்லுமுல்லுகள் இடம்பெறவில்லை என்று கூறவில்லை. ஆனால் ஒரு திட்டவட்டமான நோக்கத்துடன் வாக்களித்த பெரும்பாலானவர்களை கவனத்தில் கொள்ளாது விட முடியுமா?

யாழ் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் தொகை 5இலட்சத்து 71 ஆயிரத்து486ஆகும். இது அண்மைய கணக்கெடுப்பு இல்லை. இறப்பு, இடப்பெயர்வு காரணமாக தற்போது வாக்காளர் தொகை குறைந்திருப்பது அனைவரும் அறிந்ததே.

ஆயினும், இந்த கணக்கெடுப் பின்படி பார்ப்போமாயினும்,யாழ் மாவட்டத்தில் தமிழ் கட்சிகளுக்கு வாக்களித்த 91ஆயிரத்து 758பேர் மொத்த வாக்காளர்களில் 16.05வீதமாகும். தேர்தலில் வாக்களிக்காத எஞ்சிய 83.85 வீதமானவர்களும் தமிழ்க் கட்சிகளுக்கு எதிரானவர்கள் எனக் கொள்வோம். இதன்படி வாக்களிக்காத 83.85 வீதமானவர்கள், வாக்களித்த 16.05 வீதமான வாக்காளர்களின் மன விருப்பங்களைப் புறக்கணித்துவிட முடியுமா?

முடியும் என்றால் 12.70 வீத தமிழ் சிறுபான்மையினர் 73.95 வீத சிங்கள பெரும்பான்மையினரால் புறக்கணிக்கப்படுவதை எதிர்த்துப் போராடுவதற்கான தார்மீக உரிமையற்றவர்களாகி விடமாட்டோமா? சகமனிதனுடைய சுதந்திரத்தை உரிமைகளைப் புறக்கணிப்பவர்கள் தமது உரிமைகளுக்காக வாதிடும் யோக்கியதையை இழந்து விடுகிறார்கள்.

இன்னும் வேடிக்கை என்னவென்றால், தமிழர் பணிக்குழு தமிழ் கட்சிகளை இன்னும் கொழும்பு தமிழ் கட்சிகள் என சித்தரிப்பதுதான். இதுவேஅவர்களது காழ்ப்புணர்வை புரிந்து கொள்ளப் போதுமானது. கொழும்பிலேயே கல்வி கற்று, கொழும்பிலேயே தொழில்பார்த்து கொழும்பிலேயே வாழ்க்கை நடத்துவதோடு ஓய்வுநேர அரசியலில் ஈடுபடும் கொழும்பு தமிழர் பணிக்குழு கொழும்பை உதறி விட்டு தமிழர் பணிக்குழுவாகப் பவனி வருகின்ற அதேவேளை, கடந்த இரண்டு தசாப்தங்களாகவும் அதற்கு மேலாகவும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் உடனடி பிரச்சினைகளிற்காகவும் அனைவரதும் சுபிட்சமான எதிர்காலத்திற்காகவும் குறைகள், தவறுகளுக்கு அப்பால் தமது வாழ்வையே அர்ப்பணித்தும் அதன்விளைவாக ஏற்பட்ட இன்னல்கள் இடுக்கண்களை சுமந்து கொண்டும் இன்னும் வட-கிழக்கை தமது வாழ்விடமாய் கொண்டவர்களையே அங்கத்தவர்களாய் கொண்டிருக்கும் தமிழ் கட்சிகள் கொழும்பு தமிழ் கட்சிகளாம்!

உலகின் பல பாகங்களிலும் நடைபெறும் யுத்தங்களுடன் ஒப்பிடும் போது இலங்கையிலேயே பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக வருந்துகிறது தமிழர்பணிக்குழு. வடஅயர்லாந்தில் 3,000பேரும் காஷ்மீரில் 28,000பேருமே கொல்லப்பட்டுள்ள அதேவேளை இலங்கையில் 60,000பேர் கொல்லப்பட்டுள்ளதாகக் கவலை வெளியிட்டுள்ளனர்.

தமிழர் பணிக்குழு போன்று தமிழர் பிரச்சினையின் ஆழ அகலங்களை, அதன் பரிமாணங்களை உள்ளது உள்ளபடி புரிந்துகொண்டு அதனை தீர்ப்பதற்கான முயற்சிகளில் இறங்க மறுப்பவர்களால், நம்நாட்டில் கொல்லப்படுபவர்களின் எண்ணிக்கையை இன்னும் அதிகரிக்கச் செய்ய முடியுமே தவிர குறைக்க முடியாதுஎன்பதுமட்டும்தெளிவு.

இலங்கை இனப்பிரச்சினையானது உள்ளூர் விவகாரம் என இந்தியா கூறுமாயின், அது வரவேற்கக் கூடியதாக இருக்காது எனவும், அவ்வாறு கூறுமாயின் அதன் பெருமை கேள்விக்குரியதாகும் எனவும் தமிழர் பணிக்குழு இந்தியத் தூதுவரிடம் எடுத்துக் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியஇராணுவம் இலங்கை வந்திருந்த சமயம் "நாங்கள் சகோதரர்கள், எங்கள் பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக் கொள்கிறோம். எங்களுக்குள் சண்டை சச்சரவுகள் இருக்கும், அது உள்ளூர் விவகாரம். இந்தியாவிற்கு இங்குவேலை இல்லை. இந்தியப்படை உடனடியாக வெளியேற வேண்டும்" என பிரேமதாசா கூறியபோது தமிழர்பணிக்குழு என்ன செய்து கொண்டிருந்தது? என்பதை இந்தியத் தூதுவர் மரியாதை நிமித்தம் கேட்காமல் விட்டிருக்கலாம்.

ஆனால், நமக்கோ பாரதியின் கவிதை வரிகள் நினைவுக்கு வருகிறதே. ●

படிப்பகம்

www.padippakam.com





# புத்தாண்டை சோகமாக்கிய அடம்பன்குளம் கொலை

கடந்த 13ஆம் திகதி இரவு 10.45 அளவில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஏ.சிங்கராஜா, வயது 43 கொல்லப்பட்டார். ராஜேந்திரன், வயது35 என்பவரைக் காணவில்லை.

புத்தாண்டை முன்னிட்டு செட்டிக்குளம் அடம்பன்குளம் என்னும் இடத்தைச்சேர்ந்த மேற்குறிப்பிடப்பட்டவர்கள் உட்பட நால்வர் அன்றைய தினம் இரவு இறைச்சிக்காக மாடு அறுப்பதற்கு கிராமத்தின் எல்லைப்பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இருவர் மாடு அறுத்துக் கொண்டிருக்கையில் மற்றும் இருவர் உணவு எடுத்து வருவதற்காக தங்கள் வீடுநோக்கித் திரும்புகையில், இவர்கள் மேல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனை அக்கிராமவாசிகள் பார்த்ததுடன் இரவு நேரமாகையால் பயத்தினால் நடுங்கிப்போன அவர்கள், அன்று அதிகாலை 4மணியளவில் சென்று பார்த்தபோது அந்தோணிப்பிள்ளை சிங்கராஜா எனும் நான்கு பிள்ளைகளின் தகப்பன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடப்பதைக் கண்டனர்.

அவ்விடத்தில் வெற்று துப்பாக்கி ரவைகளைப் பார்த்த மக்கள், பிடித்துவைத்து சுடப்பட்டுள்ளார் என்ற முடிவுக்கு வந்தனர். இவருடன் வந்த இரண்டாவது நபர் பற்றி எந்தத் தகவலும் கிடைக்காததால் அக்கிராம மக்கள் அண்மையில் உள்ள இராணுவ முகாமில் முறையிட்டுள்ளனர்.

இராணுவ அதிகாரிகளோ இதைப் புலிகள்தான் செய்திருப்பார்கள் எனவும் தமக்கு இதுபற்றித் தெரியாது எனவும் கூறினர். இராணுவ முகாம் சுற்றுப் பகுதியில் உள்ள காடுகளில் தேடுதல் நடத்தவேண்டாம் என கட்டளையும் போட்டுவிட்டு கண்டுகொள்ளாமலே இருந்தார்கள்.

இதனால் குழம்பிப் போன மக்கள் 15ம் திகதி மரணச்சடங்கில் கலந்து கொள்ளச் சென்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தோழர்களிடம் கண்ணீரும், கம்பலையுமாக தங்கள் வேதனைகளைக் கொட்டித்தீர்த்தனர்.

தங்களை எந்த அரசியல்வாதிகளும் கணக்கெடுப்பதில்லை எனவும், "மக்கள் பிரதிநிதிகள் எனப் பலர் பாராளுமன்றத்தில் இருக்கின்ற போதிலும், எமது பிரச்சினைகளுக்கும் எங்கள் உயிர்களுக்கும் யாருமே உத்தரவாதமில்லை எனவும், அரசியல் தலைமைத்துவம் அற்ற அநாதைகள் நாங்கள்" எனவும் அழுதுகொண்டே கூறினர்.

காணாமல் போன மற்றைய வரைத் தேடிக் கண்டுபிடித்துத் தருமாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர்களைக் கேட்டுக் கொண்டனர். அவர்களின் அவலத்தை உணர்ந்து, தந்திரிமலை முகாம் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள முயற்சிமேற்கொண்டபோது, பல்வேறு சிரமங்களின் பின்னர் ஒருவர் மட்டுமே பேச அனுமதிக்கப்பட்டார்.

ஒரு வழியாக அனுமதியைப் பெற்று அக்கிராம மக்கள் சகிதம் ஐம்பது பேர் வரை அப்பகுதியின் காடுகளை சல்லடை போட்டும் எந்தவித பலனுமில்லாமல் திரும்பினார்கள். 'எல்லாவற்றையும் யுத்தவாதிகளுக்கே சமர்ப்பணம் செய்வோம்' எனக் கூறிச் சென்றனர்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர்கள் காட்டுக்குள் நுழைந்தபோது, கணவனின் சடலத்தையாவது பார்க்கலாம் என இருந்த மனைவி, அப்பாவின் அருமை முகத்தைப் பார்க்கலாம் என இருந்த பிள்ளைகளின் எண்ணங்கள் சிதறடிக்கப்பட்ட நிலையில் அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இந்த சம்பவங்களின் சூத்திரதாரிகள் இராணுவத்தினரே என மக்கள் ஒரே குரலில் சொல்கின்றனர். அன்றைய தினம் அப்பகுதியில் எட்டு இராணுவத்தினர் சென்றதாகவும் அதன் பின்னர் தான் இச்சம்பவம் நடந்ததாகவும், திரும்பிவந்த இராணுவத்தினர் குடிபோதையில் இருந்த மீன் வியாபாரி ஒருவரை அடித்து இழுத்துச்சென்று முகாமிற்கு அண்மையில் வைத்து விடுவித்ததாகவும், இன்னும் ஒருவரை இராணுவத்தினர் அடித்து முகாமிற்குள் இழுத்துச் சென்றதாகவும் இவ்வியாபாரி கூறியுள்ளார் என கிராமவாசி ஒருவர் உணர்ச்சி பொங்க கூறினார்.

சம்பவம் நடைபெற்ற இடம் இராணுவமுகாமிற்கு மிக அண்மையில் உள்ளதாலும், மக்கள் கூறுகின்ற விடயங்களை வைத்துப்பார்க்கும் போதும் இராணுவமே இதைச் செய்திருக்கலாம் என்றமுடிவுக்கு வரக்கூடியதாக உள்ளது.

இதே இராணுவ முகாமில் இருந்துதான் கடந்த சில மாதங்களுக்கு முன், அறுவடைசெய்துவிட்டு உழவு இயந்திரத்தில் சென்றவர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தது, மற்றும் ஆண்டியார் புளியங்குளம் எனும் இடத்தில் மூன்று பெண்களிடம் விசாரணை என்ற பெயரில் சேட்டைகளில் ஈடுபட்டது போன்ற சம்பவங்கள் நடைபெற்றன.

இம்முகாமானது ஒரு தனிப்படைத் தலைமையகத்தைக் கொண்டு தந்திரிமலை எனும் இடத்தில் இயங்கிவருகின்றது. இவர்களின் கட்டுப்பாடற்ற போக்குகளும் மனித உயிர்களை மதிக்காமல் நடத்தும் முறைகளும் இம்முகாம் சம்பந்தமாக அப்பகுதி மக்களுக்கு பெரும் ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது.



காணாமல்போன ராஜேந்திரன் (வயது 35)

இராணுவ சீண்டல்களுக்கு ஆளான அப்பகுதி வாழ் மக்கள் நியாயமான தங்கள் அனைத்து விடயங்களும் புறக்கணிக்கப்படுவதாகவும் கூறுகின்றனர். இது தொடருமானால் தாங்கள் அப்பகுதியை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை எனக் கூறுகின்றனர். மனித உரிமை குழுக்களாவது குறைந்த பட்சம் இவற்றைக் கவனத்தில் கொள்ளுமா?

- வன்னிமகன்

---



# சோதனை: தாண்டிக் குளத்திற்குப் பதிலாக உயிலங்குளம்

வன்னிப் பகுதிகளுக்குள் போக்குவரத்து, முன்னர் தாண்டிக்குளம் ஊடாகவே நடைபெற்றது. "ஜயசிக்குறு" தொடங்கியபின்னர் இப்போது உயிலங்குளம் ஊடாகவே நடைபெறுகின்றது.

விடுவிக்கப்பட்ட இடத்திலிருந்து விடுவிக்கப்படாத இடத்திற்கு - இன்னொருவகையாகச் சொன்னால் இராணுவப் பிடியிலிருந்து புலிகளின் பிடிக்குள் மாறி மாறி இந்தப் பயணம். சனி மாற்றத்திலேனும் இந்தப் பிடிகள் விடுபட்டபாடாயில்லை.

நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து இராணுவ கெடுபிடிகளைத் தாண்டி வன்னிக்குள் போகவேண்டியவர்கள், முதலில் உயிலங்குளம் இராணுவச் சோதனைச்சாவடியை அடையவேண்டும். இங்கு அவர்கள் கொண்டு போகும் பொருட்கள் அக்குவேறு ஆணிவேறாக சோதனையிடப்பட்டு உள்ளே செல்லஅனுமதிக்கப்படுவர்.

அங்கிருந்து இரண்டு மைல் தூரம் வரை மூட்டை முடிச்சுக்களுடன் நடைப் பயணம். அதற்கப்பால் இன்னொரு மூன்று மைலுக்கு சைக்கிளில் பயணம். அங்கு வாடகைச் சைக்கிள் ஓட்டிகள் இதற்காக இருக்கின்றனர். வாடகை 100ரூபா. இதில் புலிகளுக்கு 25ரூபா, சைக்கிள் ஓட்டிக்கு 75ரூபா.

புலிகளின் சோதனைச் சாவடியை அடைந்ததும், புலிச் சோதனை. இங்கு வெளிநாட்டுக்காரர், உள்ளூர்வாசி, வியாபாரி என தரம்பிரிப்பு. பின்னர்"பாஸ்" வழங்கல். இங்கும் ஒருக்கால் அக்குவேறு ஆணிவேறு சோதனை. பின்னர் பள்ளமடுவிலிருந்து வாட்கை வண்டிகள்.

1. கார் - ரூபா 2000.
2. மோட்டார்சைக்கிள் ரூபா 300.
3. ஓட்டோ ரூபா1500.

புலிகளின் பரிசோதனையின் பின்னர் அவர்கள் "பாஸ்" வழங்குவார்கள். வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் அவர்கள் குறிப்பிடும் திகதியில் அவர்களைச் சந்திக்க வேண்டும். வியாபாரிகளிடம் மட்டும் 'பாஸ்' இற்காக ரூபா 200, அறவிடப்படுகின்றது.

பள்ளமடு எனும் இடத்திற்கு இரவு 7 மணிக்கு முன் ஆஜராகிவிட வேண்டும். பின்னர் புலிகளால் அமைக்கப்பட்ட முகாமிற்குள் தங்க வேண்டும். ஆண்கள், பெண்கள் என தனித்தனியாக பிரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, மன்னார், வவுனியா செல்வோர் தனியாக பிரிக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். பின்னர் முதலாவது நிலைக்கு வரவேண்டும். வரிசையில் மணித்தியாலக் கணக்கில் நிற்க வேண்டும். மீண்டும் சைக்கிள் பயணம். உயிலங்குளம் முகாமிற்கு சில மீற்றர் தூரத்துக்குள் சைக்கிள் நிறுத்தப்பட்டு உயிலங்குளம் முகாம் வரை நடைப்பயணம்.

உயிலங்குளத்திலிருந்து வவுனியா செல்வோர் நாளொன்றுக்கு 150-250பேர் வரை அனுமதிக்கப்படுகின்றனர். மன்னார் செல்வோர் இவற்றைவிட சற்று அதிகமாக அனுப்பப்படுகின்றனர். செல்ல அனுமதிக்கப்படாதவர்கள் மீண்டும் வன்னிக்குள் உள்ள முதலாவது நிலைக்குத் திரும்ப வேண்டி நேரிடுகிறது. உயிலங்குளத்திலிருந்து இராணுவம் அனுமதிக்கும் வாகனங்களில் மட்டுமே மன்னார், வவுனியாவிற்குள் நுழையமுடியும்.

வன்னிக்குள் இந்தப் போக்குவரத்துக்களினால் அன்றாடம் மக்களுக்குப்படும் துன்பங்கள் சொல்லித் தீராது எனவும், இந்த அலைச்சல் மற்றும் கெடுபிடிகளினால் மக்களிடையே மனிதாபிமானம், புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு என்பன அற்று மனித உறவுகள் மதிக்கப்படாமல்,தான் உண்டு தன்வேலையுண்டு என்ற நிலைக்கு மக்கள் மாறிவிட்டனர் என அங்கிருந்து வருபவர்கள் கூறுகின்றனர்.

- அ. விஜயன்

படிப்பகம்

www.padippakam.com



# சொலமன் பதில்கள்

**கொழும்பில் நடக்கும் கைதுகள் தொடர்பாக இந்து மகாசபைகள் எல்லாம் இணைந்து இந்திய அரசிற்கு மகஜர் கொடுத்துள்ளதே, இந்திய அரசு ஆக்கபூர்வமான முயற்சி ஏதாவது எடுக்குமா?**

மு. தர்மகுலசிங்கம். தெமட்டகொடை

இவர்களைப் போன்ற பிரமுகர்கள்தான் 87-90ல் இந்தியத் தலையீட்டை எதிர்த்தவர்கள். இந்தியா இலங்கையில் இருந்து தனது படைகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என பிரேமதாசாவும், பிரபாகரனும் கோரிக்கை விடுத்தபோது அதற்கு ஒத்து ஊதியவர்கள். இன்று 8 வருடங்களின் பின்னர் மீண்டும் தாம் பாதிப்புக்குள்ளாகும்போது இந்திய உதவி தேவையாக உள்ளது போலும். ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் பிரச்சினைக்குத் தீர்வு காண பிரபாகரன் தயாரெனவும், அதற்கான இந்திய மத்தியஸ்தத்தை நாடினால், இந்தியாவின் தலையீடு சாத்தியமாகலாம். அவரது வாயிலிருந்து இந்த உறுதி மொழி வராத வரையில், மீண்டும் மீண்டும் தமது விரல்களை யாரும் சுட்டுக் கொள்ளவிரும்பமாட்டார்கள்.

**இன்றைய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்கின்றார்கள்?**

இ. சண்முகரத்தினம் நெலுக்குளம், வவுனியா

அநேகமானோர் பாராளுமன்றத்தில் ஒரு சம்பளம், இராணுவத்தில் ஒரு சம்பளம் என இரு சம்பளம் எடுக்கின்றார்கள். மற்றவர்கள் அரசுக்கும் நோகாமல், புலிகளுக்கும் நோகாமல் எப்படி மிகுதிக் காலத்தைக் கழிப்பது என்பதில் மண்டையை போட்டுப் பிய்க்கின்றார்கள்.

**சிறீலங்கா இராணுவம் கடந்த ஒரு வருடமாக யாழ் - கண்டி வீதியைத் திறக்க முடியாமல் உள்ளது. இவர்கள் இதனைச் சாதிப்பார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?**

சே. இராமநாதன் நல்லூர்.

பாதையை திறப்பது இராணுவ ரீதியில் புலிகளுக்கு பலவீனமாகிப் போகலாம். இராணுவம் தனக்கு கிடைத்த வெற்றியாவும் கொக்கரிக்கலாம். ஆனால் வட மாகாண மக்களுக்கு போக்குவரத்துக்கு ஓர் பாதை வேண்டும். வன்னியில் 10,000க்கு மேற்பட்ட மக்களும், யாழ்ப்பாணம், கொழும்பில் ஆயிரக்கணக்கான மக்களும் யாழ், கொழும்பு போகப் பதிவு செய்துவிட்டு வருடக்கணக்காக காவல் இருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்திற்கு எப்பொருட்களையும் கொண்டு போக முடியாமல் உள்ளது என்பதுடன், யாழ்ப்பாண விளைபொருட்களுக்கு சரியான சந்தை வாய்ப்பு இல்லாமலும் உள்ளது. மக்களின் நலன்கள், அவர்களது வாழ்க்கை என்பதைக் கவனத்தில் எடுத்தால் யாழ்ப்பாணத்திற்கான வீதிப் போக்குவரத்தின் அவசியத்தை யாரும் உணரலாம். சிறீலங்கா இராணுவத்தினர் வீதியைத் திறப்பார்களா என்று கேட்பதிலும் விட தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணத்துடன் ஓர் வீதிப் போக்குவரத்து அவசியம் என்பதைத்தான் சம்பந்தப்பட்டோர் புரிந்து கொள்ள வேண்டும்.

**தமிழ்க்கட்சிகளின் புத்தாண்டுச் செய்தியில் தமிழ்க்கட்சிகள் எல்லாம் ஒன்றுபட வேண்டுமென எல்லோரும் கோரியுள்ளார்களே, ஐக்கியத்திற்கான ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் முயற்சி எந்த மட்டத்தில் உள்ளது?**

ஆ. குமாரசாமி நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பத்திரிகை அறிக்கையில் எமது தலைவர்கள் சூரப் புலிகள். மக்களுக்கு எது விருப்பமோ அதனை பத்திரிகைக்கு கொடுத்தால் போதுமானது, மக்கள் வாசித்துக் கொள்வார்கள். நடைமுறையில் இதெல்லாம் சரிப்பட்டு வராது தம்பி. எமது முயற்சியும் சாண் ஏற முழம் சறுக்கும் கதை தான். ஆனாலும் கஜனி முகம்மது மாதிரி, இவர்களை நாம் விடுவதாக இல்லை.

**ஈ.பி.டி.பி. ஏன் இன்னும் பிரதேசசபைகளை நடாத்தாமல் காலம் தாழ்த்துகின்றது?**

சு. சசிதரன். மட்டக்களப்பு.

தாங்கள் கேட்ட 30இலட்சத்தையும் அரசு தரவில்லை என்று ஈ.பி.டி.பி.யினர் காரணம் கூறினாலும், அங்கத்தவர்களை மாற்றி திறமையான அங்கத்தவர்களை நியமிக்க தலைவர் ஆள் தேடித்திரிவதாகக் கேள்வி. இலங்கையில் ஆட்கள் கிடைக்காமையால் வெளிநாடுகளிலும் ஆட்கள் தேடி அலைகிறாராம்.

**தமிழ்க்கட்சிகளை ஒற்றுமைப்படுத்துவதில் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன?**

ஜே.எம். ஜமால்தீன் மருதானை.

1. ஐக்கியம் ஒன்று உருவாகி ஒரு சில நாட்களில் குழம்பி விட்டால் மக்கள் எம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள்? எனவே இவை வேண்டாம் தம்பி!

2. முஸ்லீம் பிரச்சினையைத் தீர்க்காமல் வட-கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அவ்வடிப்படையில் தென்கிழக்கு மகாணசபையை விட்டுக்கொடுத்துள்ளோம். இதனை எதிர்ப்பவர்களுடன் எப்படிக் கூட்டுச் சேர்வது?

3. ஆயுதம் வைத்துள்ளோர் எங்களை மிரட்டுகின்றார்கள். எமது அரசியல் வேலைகட்கு தடையாக உள்ளார்கள். இவர்களுடன் எப்படி இணைவது?

4. கொள்கை ரீதியாக இராணுவத்துடன் இணைந்து செயற்படுவதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை இது ஒரு சாரார்.

இன்னும் ஒருசாரார்–

1. "ஈ" ஐக் கொண்டு தொடங்கும் மூன்று கட்சிகளும் ஒன்றிணைந்தால் போதும்.

2. யாழ் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும், அதன் பின்னரும் எம்முடன் ஆயுத மோதலில் ஈடுபட்டு வருபவர்களுடன் எப்படிப் பேசுவது.

3. அரசியல் விடயங்கள்பற்றி சந்திரிகாவுடன் பேச இன்னும் நேரம் வரவில்லை. அதை விடுத்து பிரதேச சபைகளில் எப்படி இணைந்து செயற்படுவது, மாகாணசபையில் எப்படிப் போட்டி போடுவது போன்ற விடயங்களைப் பற்றிப் பேசலாம்.

இப்படிப் பல பிரச்சினைகள் உள்ளன.

---




## வெகு விரைவில் யாழ் சிறீதர் தியேட்டரில் பிரதேச சபைக் கூட்டங்கள்?

யாழ்ப்பாணத்தில் 10 பிரதேச சபைகளில் வெற்றி அடைந்த ஈ.பி.டி.பி இதுவரை தமது கடமைகளை மேற்கொள்ள ஆரம்பிக்கவில்லை. அதே சமயம் 10 பிரதேசசபைக் கூட்டங்களையும் மதாந்தம் தமது அலுவலகமான சிறீதர் தியேட்டரில் நடாத்த ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஆலோசித்து வருகின்றாராம்.

ஏனைய இடங்களில் பாதுகாப்பில்லை என்றும் அவர் இதற்கு காரணம் கூறுகின்றார். ஒவ்வொரு பிரதேசசபைக் கூட்டத்திலும் தான் நேரடியாகக் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால்தானாம் இப்பாதுகாப்புப் பிரச்சினை தோன்றியுள்ளது. இவர் என்ன அடிப்படையில் பிரதேச சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ள முனைகின்றார்? ஓர் பாராளுமன்ற உறுப்பினர் அவ்விதம் கலந்து கொள்ளலாமா? என்பதைப் பற்றியெல்லாம் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இல்லையேல் 10 பிரதேசசபைக்கும் தகுதியான தலைவர் இல்லாமையால் ஏற்படுகின்ற கோளாறோ தெரியவில்லை.

## கொம்பனித்தெரு தமிழர் கைதும் கூட்டணியின் கொள்கை விளக்கமும்

கடந்த மாதம் கொழும்பில் வகை தொகையில்லாமல் தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டது யாவரும் அறிந்ததே. அப்பொழுது கொம்பனித் தெரு பொலீஸ் நிலையத்திலும் சில தமிழ் மக்கள் கைது செய்து வைக்கப்பட்டனராம்.

இவர்களை விடுவிக்க உதவி செய்யும்படி சில தமிழ்ப் பிரமுகர்கள் கூட்டணித் தலைவரை நாடினராம். அவரும் பொலீசுடன் தொலைபேசியில் கதைத்தாராம். அதன் பின்னரும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை.

எனவே அத் தமிழ்ப் பிரமுகர்கள் மீண்டும் தலைவரிடம் போய் என்ன செய்யலாம் எனக் கேட்டார்களாம். இதனை எல்லாம் பெரிதுபடுத்தி சந்திரிகா அரசைக் கவிழ்க்க நாம் தயாராக இல்லை என ஒரு குட்டிப் பிரசங்கமே நடத்தினாராம் தலைவர். இவர்கள்தான் அனுருத்த ரத்வத்தைக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் போகின்றோம் என தமிழ் மக்களுக்கு 'புலுடா' விடுகின்றார்கள்.

## தமிழ் மக்களுக்கு தலைமை தாங்க ஐ.தே.க. தந்த 'பிரபாகரனின் மாற்று'

கடந்த மாதம் டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன் உட்பட ஏறத்தாழ 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு வார விஜயமொன்றை மேற்கொண்டு 'நோர்வே'க்குச் சென்றார்கள். நோர்வேயில் மீன்பிடி அபிவிருத்தி தொடர்பாக இவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதாம். அந்த விளக்கத்துடன் புறப்பட்ட டக்ளஸ் அவர்கள் ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ் என்று அலைந்து அங்குள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். தோழர்களுக்கு வலை வீசினாராம்.

தான்தான் ஒரே ஒரு தமிழ்த் தலைவர், தான் மாத்திரம்தான் பிரபாகரனுக்கு மாற்றீடானவர் என முழங்கித் தள்ளினாராம். "அது சரி, இக் கைதுகளை உங்களால் ஏன் நிற்பாட்ட முடியவில்லை? தீர்வுத்திட்டத்தை திருத்த என்ன முயற்சி செய்தீர்கள்?" என பல கேள்விக்கணைகளாம்!

'தீர்வுத்திட்டம் தொடர்பாக சந்திரிகாவுடன் பேசி ஆகப்போவது ஒன்றுமில்லை, ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்தால் தாம் கேட்பது எல்லாவற்றையும் கொடுக்கும்' என்று பெரும் கதைகளை அவிட்டு விட்டாராம். ஐ.தே.கட்சியால் உருவாகி, அவர்களால் பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்தவர்களுக்கு ஐ.தே.க. மீது நம்பிக்கை இருப்பதில் தப்பில்லை.

## திடீர் அன்பு வரும் முன்னே தேர்தல் வரும் பின்னே

தமிழ் மக்களின் கைதுகளுக்காக ஐ.தே.க. கண்ணீர் வடிக்கத் தொடங்கியுள்ளது. கண்டன அறிக்கைகள், எச்சரிக்கைகள் என பலப்பல. மகாணசபைத் தேர்தலில் தென்பகுதித் தமிழ் மக்களின் வாக்குகளும் தேவைதானே. ஐ.தே.கட்சி அதில் மிகக் கவனமாக உள்ளது. இதன் பின்னர்தான் ஆளும் தரப்பாருக்கு ஓடிவெளித்ததாம். உடனே முப்படைகளையும் அழைத்து கூட்டம், தமிழ்க்கட்சிகளை அழைத்துக் கூட்டம், வகை தொகையில்லாக் கைதுகள் அர்த்தமற்றவை என அறிக்கை.... அவர்களுக்கும் தமிழர் வாக்குகள் தேவை தானே! எனவே மகாணசபைத் தேர்தல் வரையிலாவது கொஞ்சம் அடக்கி வாசிப்பார்கள் போல் தோன்றுகின்றது. இத்தேர்தல்கள் அடிக்கடி வந்தால் தமிழர்களுக்கு கொஞ்சம் பிரச்சினை குறையும் போல் உள்ளது.

ஆனால், தமது கண்டன அறிக்கைகளால்தான் அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்ததாக கூட்டணியின் தம்பட்டம். அப்படியாயின் கடந்த இரண்டு வருட கண்டன அறிக்கைகளுக்கு அரசு ஏனாம் நடவடிக்கை எடுக்கவில்லை?

## தலைவர்கள் கூட்டம் கூடுகிறார்கள் தமிழ் மக்களே உஷார்!

கடந்த 5ம் திகதி கூட்டணியின் செயற்குழு கூடி மிக முக்கியமான முடிவுகள் எடுத்தார்களாம்.

01. மகாண சபைத் தேர்தலை வட-கிழக்கில் நடாத்தும்படி கேட்பதில்லை. தேர்தல் நடந்தால் போட்டி இடுவது. அப்படி ஓர் முடிவு.

02. ஏனைய மாகாணங்களில் தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பதென காரசாரமான விவாதமாம். ஆனால் அது தொடர்பாக முடிவெடுக்கவில்லை. கூட்டணி யாருக்கு வாக்களிக்கும்படி சொல்லப் போகின்றார்கள் என்பதைத்தான் மக்கள் இப்பொழுது ஆவலுடன் எதிர்பார்த்துள்ளார்கள்.

03. தமிழ் மக்களைக் கைது செய்வதை நிறுத்தாவிடில் அனுருத்த ரத்வத்தைக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் போகின்றார்களாம்.

04. கூட்டணியில் இளைஞர்கள் இல்லாமல் இருப்பதால் கூட்டணிக்கு ஓர் இளைஞர் அமைப்பு உருவாக்குவது தொடர்பாகவும் விவாதிக்கப்படதாம். புலிகள் இன்னும் தமிழீழத்துக்காக போராடுவதால் இப்பொழுது இளைஞர் அமைப்பு தேவையில்லை என கிழக்கின் சிங்கம் ஆணித்தரமாக வாதிட்டாராம்.

தமிழ் மக்களுக்குத் தேவையான முக்கியமான முடிவுகளாக இவை உங்களுக்குத் தென்படவில்லை?

படிப்பகம்

www.padippakam.com



# இந்திய இலங்கை ஒப்பந்தம்

## 10 வருடத்தின் பின் ஓர் பார்வை





(சென்ற இதழ் தொடர்ச்சி)

புலிகளின் குறுகிய நலனடிப் படையிலான இக்குழப்பங்கள், அதற்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் ஓர் புறம் நடந்து கொண்டிருக்க, மறுபுறம் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்ற இலங்கை அரசின் நெருக்கடியும் அமைதிப் படைக்கு இருந்தது.

எனவே, ஓர் ஜனநாயகச் சூழ்நிலையை ஏற்படுத்துவதிலும், துப்பாக்கி மூலமாக தாம்தான் பெரியவர்கள், மக்களின் பிரதிநிதிகள் என ஒவ்வொரு இயக்கமும் கூறும் நிலையை மாற்றி, மக்களே தமது பிரதிநிதிகளைத் தெரிவதற்கு வழி அமைப்பதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் உருவாக முடியும் என்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் கோரிக்கையினால், விரைவில் தேர்தல் நடத்துவதில் இந்திய இலங்கை அரசுகள் முனைப்புக் காட்டின. ஜெயவர்த்தனாவினால் தேர்தல் தேதியும் அறிவிக்கப்பட்டது.

### தமது இருப்பிற்குக் கொடுத்த பலிகள்

ஏனைய இயங்கங்களைத் தடை செய்து, தாங்களே தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதி என புலிகள் தமக்குத் தாமே சூட்டியிருந்த கிரீடத்திற்கு, தேர்தல் வந்தால் ஆபத்து வருமோ என்ற அச்சம் ஒருபுறம், ஏனைய இயக்கங்களின் செயற்பாடுகள் பரவலாக அதிகரித்து வருவதனால் தமக்கு மட்டுமே அதிகாரம் தரவேண்டும் என்பதற்காக அவர்கள் நடத்திய போலிப் போராட்டங்கள் நீண்டகாலத்திற்கு கை கொடுக்காது என்ற நிலை மறுபுறம்.

மொத்தத்தில் ஜனநாயகச் சூழ்நிலை ஏற்பட வழிவிட்டால், அதில் தாம் அடித்துச் செல்லப்பட்டு விடுவோம் என்ற அச்சம் புலிகளுக்கு வலுத்தது. எனவே அமைதிச் சூழலைக் குழப்பினாலொழிய புலிகளால் தமது இருப்பைக் காப்பாற்ற முடியாது என்ற நிலையில் அதற்கான ஓர் உறுதியான காரணத்தை உலகிற்குக் காட்டவேண்டியிருந்தது.

இதன்விளைவே, அவர்களது குழப்பல் நாடகத்தின் உச்சக்கட்டக் காட்சியான குமரப்பா, புலேந்திரன் உட்பட 13பேரின் (தற்) கொலையாகும். குமரப்பா, புலேந்திரன் உட்பட 13 புலிகளும் பலாலி இலங்கை இராணுவ முகாமில் காவலில் இருந்தபோது, இவர்களை விடுவிப்பது என்பதைவிட, அந்தக் கைது நடவடிக்கையை இந்தியாவிற்கெதிரான பிரச்சாரமாக்குவதிலேயே புலிகள் குறியாக இருந்தனர்.

### உணர்ச்சி வெள்ளத்தில் மெய்மறந்தனர் மக்கள்

இந்திய அமைதிப் படைக்கு எதிராக தமிழ் மக்களை அணிதிரட்ட, இவர்களையும் பலிகொடுக்கும் வெறியே முனைப்புற்றிருந்தது. இந்தியா இவர்களை விடுவித்துவிட்டால் தாம் இந்தியாவிற்கெதிராக மேற்கொண்ட இத்தனை நடவடிக்கைகளும் மக்களைத் தமக்கெதிராகத் திருப்பிவிடும் என்பதனால், தமது பிரச்சாரமும் நடவடிக்கைகளும் உண்மை என மக்களை நம்பவைக்க வேண்டியிருந்தது.

இதற்கு அவர்கள் செலுத்திய விலை 13 புலிகளின் உயிர்கள். மக்கள் மத்தியில் தம்மை நம்பத் தகுந்தவர்களாகக் காட்டுவதற்கு எவ்வளவு வெறித்தனமாக இருந்தார்கள் என்பதை இது தெளிவுபடுத்தும்.

இலங்கை இராணுவம் இவர்களைக் கொன்றுவிட்டதாக அப்பட்டமான பொய்ப்பிரச்சாரம் நடாத்தப்பட்டது. சிறைக்குள் 13 பேர் கொல்லப்பட்டுவிட்ட பரபரப்பில் ஏன்? யாரால்? எவ்வாறு கொல்லப்பட்டார்கள்? என்பதை பகுத்தறிய மக்களும் மறந்து விட்டனர்.

பரபரப்பான சூழலை மாறவிடாமல் வேகமாக ஓர் பெரும் மரணச் சடங்கை நடாத்தி இலங்கை இராணுவத்தினர் கொன்றனர் என்றும், இந்தியா இலங்கை அரசுக்கு உதவவே வந்தது. அதனால்தான் இவர்களை இந்தியா காப்பாற்றவில்லை என்றும் வெற்றிகரமான பிரச்சாரத்தை மேற்கொண்டனர்.

### இவர்களை கொன்றது உண்மையில் யார்?

இவர்கள் இறந்த அன்று மதியம் 12.30 மணியளவில் 'டைம்ஸ் ஒஃப் இந்தியா' நிருபர் சீமா-குகா காவலிலிருந்த இப்புலிகளை சந்தித்தார். சீமா-குகா சென்றபோது இவர்கள் இலங்கை இராணுவத்தினருடன் கரப்பந்தாட்டம் விளையாடிவிட்டு வந்திருந்தனர்.

சர்வசாதாரணமாக சந்தோசமாகவே நிருபருடன் பேசினர். ஏறத்தாழ 1.30க்கு நிருபர் சென்றுவிட்டார். 2மணியளவில் மாத்தயா இவர்களைப் பார்க்க வந்தார். 3மணியளவில் அனைவரும் சயனைற் உட்கொண்டு மரணமடைந்தனர். இந்த உண்மை தெரியாதவர்கள் இன்று அநேகர் உள்ளனர்.

### இந்தியப் படையை எதிரிப் படையாக்கினர்

மக்கள் அமைதியையே விரும்புகிறார்கள் என்பதையும் அமைதிச் சூழல் ஏற்பட்டால், தமது இருப்பு என்பதே கேள்விக்குள்ளாகும் என்பதாலும் தமது சகாக்களைத் தாமே கொலை செய்துவிட்டு இராணுவத்தால் கொல்லப்பட்டதாக நாடகமாடி அமைதிச் சூழலைக் குழப்பி அமைதிப்படையை யுத்தத்திற்குள் இழுத்துவிடுவதற்கான ஓர் பலமான காரணியாக இதைப் பயன்படுத்தினர்.

இப் போலிக் காரணத்தைக் காட்டியே புலிகள் பரவலாக அப்பாவிகள் மீது வெறித்தனமான தாக்குதல்களை ஆரம்பித்தனர். யாழ்ப்பாணம் சென்ற ரூபாவாஹினி குழுவினரை உயிருடன் கொளுத்தினர்.

மட்டக்களப்பில் புகையிரதத்தில் பயணம் செய்து கொண்டிருந்த சிங்களவர்களைத் தனியாக ஓர் பெட்டிக்குள் அடைத்து தீவைத்துக் கொளுத்தினர். இப்படி இவர்களின் வெறியாட்டம் அதிகரித்ததும் இலங்கை அரசு அமைதிப்படையை "உங்கள் கடமையைச் செய்யமுடியாவிட்டால் திரும்பிப் போங்கள்" என நெருக்கடி கொடுக்க ஆரம்பித்தது.

எனவே புலிகளிடமிருந்து கட்டாயமாக ஆயுதங்களைப் பறிக்க வேண்டிய சூழ்நிலை இந்திய இராணுவத்திற்கு ஏற்பட்டது. ஒன்றரை மாதங்களாக ஆயுதங்களையும் ஒப்படைக்காமல் தொடர்ச்சியாக அமைதிப்படையை ஆத்திரமூட்டுவதும், சங்கடத்தில் மாட்டுவதுமாகவே புலிகள் செயற்பட்டனர் இதன் மூலம் நண்பனாக அமைதிகாக்க வந்த இந்திய இராணுவத்தைப் போருக்கான ராணுவமாக மாற்றியது புலிகளே என்பதை யாரும் மறுக்க முடியாது.

### ஜே.ஆரின் வலையில் வீழ்ந்தனர் புலிகள்

இலங்கை இராணுவத்தின் வடமராட்சித் தாக்குதல் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருக்கும் போதுதான் இந்தியா தலையிட்டது. இலங்கை அரசைப் பொறுத்தவரை, தாம் இராணுவ ரீதியில் நசுக்கிவிட இருந்த போராட்டத்திற்குள் இந்தியா நேரடியாகத் தலையிட்டமையைத் தடுக்கவும் முடியாவில்லை அதே வேளை மனப்பூர்வமாக அதிகாரப் பகிர்வினை மேற்கொள்ளவும் விருப்பமில்லை.

அதிகாரம் பகிரப்பட்டால் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பினதும், மக்களின் மீதுமான தமது ஆளுமையும் பிடிமானமும் குறைந்துவிடும் என பயம் இருந்தது. இது சிங்கள மேலாதிக்க ஆட்சியாளர்கட்குப் பிடித்தமான ஒன்றல்ல.

எனவே இந்திய அமைதிப் படை வந்த பின்னரும் தமிழ்த் தலைமைகட்கும், இந்தியாவுக்கும் இடையே பகைமையை மூட்டும் தனது ராஜதந்திரத்தைத் தொடர்ந்தது. அதன் விளைவே குமரப்பா குழுவினரைக் கொழும்புக்குக் கொண்டுவரும் அரசின் முயற்சியாகும். இந்த ராஜதந்திரத்தை அடையாளம் காண புலிகளின் சர்வாதிகார மோகம் விடவில்லை. இலகுவாக புலிகள் அதற்குப் பலியாகினர்.

இந்தியா போன்ற ஓர் சக்தி மிக்க பின்பலம் எம்முடன் கைகோர்த்துச் செயற்பட முன்வந்தபோது, உண்மையில் மக்களின் அமைதி, சுபிட்சம், வளமான வாழ்வை உளப்பூர்வமாக முன்னிலைப்படுத்திச் செயற்படுபவர்களாக இருந்திருந்தால், அனைத்து இயக்கங்களும் ஒன்றுபட்டு அர்த்தமுள்ள வகையில் அதிகாரப்பகிர்வைப் பெற்று அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும்.

### தந்திரம் வென்றதாக ஜே.ஆர். பெருமை

83-87 நான்கு ஆண்டு விடுதலைப் போரிலான இழப்பு இன்றைய நிலையில் மிகவும் குறைவானதே. ஒன்றுபட்டு நின்று செயற்பட்டிருந்தால், 87-97 இந்தப் பத்தாண்டு அழிவுகள், இழப்புகள் தடுக்கப்பட்டிருக்கும் என்பதுமட்டுமல்ல இத்தனை இழப்பின் பின் இன்று அரசால் முன்வைக்கப்பட்டிருக்கும் தீர்வை அன்றே பெற்றிருக்க முடியும்.

ஆனால் இந்திய அரசின் ராஜதந்திரத்தைத் தோற்கடிக்க இலங்கை பயன்படுத்திய சிறு முயற்சிகளுக்கெல்லாம் புலிகள் பலியாயினர். இது இலங்கை அரசுக்கு வெற்றியானது.

இந்தியா தோற்றால் இலங்கைத் தமிழரின் போராட்டம் தோற்கும் என்பது இலங்கை அரசுக்குத் தெரியும். புலிகளுக்கு, மக்களின் விருப்பங்கள் கோரிக்கைகள் வெல்ல வேண்டும் என்பது முக்கியமாக இருக்கவில்லை. தாமே ஏகபோக ஆட்சியாளராக இருக்க வேண்டும் என்ற குறுகிய நோக்கமே இருந்தது.

இதற்காகவே இந்தியா ராணுவத்தை எதிர்த்தது. எனவே மிக இலகுவாக இலங்கை அரசின் விருப்பத்தைப் புலிகள் நிறைவேற்றத் தொடங்கினர். இதனைத் தனது ராஜதந்திர வெற்றி என ஜே.ஆர். பின்னர் பெருமையுடன் கூறினார்.

### மக்களின் சாவுகளில் புலிகள் தேடிய லாபம்

யாழ் குடாவில் நடைபெற்ற யுத்தத்தில் பலநூறு அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். பொதுமக்களைப் புலிகள் கேடயமாகப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தியதால் கணிசமான மக்கள் கொல்லப்பட்டனர். புலிகளைப் பொறுத்தவரை ஆரம்பத்திலிருந்தே, "மக்கள் பலர் கொல்லப்பட்டால் ஏனையவர்கட்கு பழிவாங்கும் உணர்வு வரும். இதனால்அவர்கள் இயக்கத்தில் இணைவார்கள். இதன்மூலம் போராட்டம் வெல்லும்" என்ற சித்தாந்தத்தைக் கொண்டிருந்தனர்.

எனவேதான் ஒரு ராணுவத்தைக் கொல்ல 100மக்களைப் பலி கொள்ளவும் அவர்கள் தயங்குவதில்லை. மக்கள் அடர்த்தியாக வாழும் இடங்களிலும், நெரிசலான இடங்களிலும் ஒளிந்திருந்து ஒருசில இராணுவத்திற்குச் சுட்டுவிட்டு ஓடும் வழக்கம் புலிகளிடம் நீண்டகாலமாகவே இருந்து வருவதாகும்.

அத்துடன் பொதுவாக போர்ச் சூழலில் அப்பாவி மக்கள் பாதிக்கப்படாதிருக்கக் கையாளப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகள், சட்டங்களைக் கூட புலிகள் கண்மூடித்தனமாகத் துஷ்பிரயோகம் செய்தனர். இவை கணிசமான மக்கள் அழிவுக்கும், இம்சைக்கும் காரணமானது.

வைத்தியசாலைகள், பாடசாலைகள் ஆகியவற்றை போர்ச்சூழ்நிலையிலும் மதிக்கவேண்டும் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். ஆனால் யாழ்ப்பாணத்தில் இந்திய இராணுவத்துடன் சண்டையிட்ட புலிகள், பின்வாங்கி யாழ் வைத்தியசாலை நோயாளர் பிரிவுகளில் ஒளிந்திருந்து ராணுவத்தைத் தாக்கினர்.

- எஸ். கந்தையா -

இராணுவம் திருப்பித் தாக்கியதில் நோயாளர், தாதிகள், பார்வையாளர்கள் எனப் பலர் இறந்தனர். இதற்கு மூலகாரணம் புலிகளே எனினும், அதனை இந்திய இராணுவத்திற்கெதிரான பிரச்சாரமாக்கி அதில் புலிகள் தற்காலிக இலாபங்களை அடைந்தனர்.

### வந்தவர்கள் முதுகிலும் மக்களது நெஞ்சிலும்

இன்னோர் சம்பவத்தில், யாழ் இந்துக்கல்லூரிக்குள் இருந்து புலிகள் இந்திய ராணுவத்தை சுட்டனர். இந்திய ராணுவத்தினர் திருப்பிச் சுட்டனர். பாடசாலைநேரத்தில் புலிகள் நடத்திய இத்தாக்குதல்-பதில் தாக்குதலின் நடுவில் மாட்டிக் கொண்ட ஓர்ஆசிரியர் கொல்லப்பட்டார். யாருடைய குண்டினால் கொல்லப்பட்டார் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் இப் பிரச்சாரம் இந்திய இராணுவத்திற்கெதிராகவும் அன்று மாகாண அரசில் இருந்த ஈ.பி.ஆர். எல்.எவ். இற்கு எதிராகவுமே திசை திருப்பப்பட்டது.




ஆனால், பின்னர் மன்னார் வைத்தியசாலைக்குள்ளிருந்து புலிகள் இந்திய இராணுவத்திற்கெதிராக தாக்குதல் நடத்தினர். வைத்தியசாலைக்குள் புலிகள் இருந்ததால் திருப்பித் தாக்குதல் நடத்த முடியாததால் இந்திய இராணுவத்தினர் 30 பேர் வரை கொல்லப்பட்டனர்.

யாழ் வைத்தியசாலைத் தாக்குதலிலேயே புலிகளும் பகிரங்கமாகக் கண்டிக்கப்பட்டிருந்தால் இரண்டாவது சம்பவம் தடுக்கப்பட்டிருக்கும். ஆனால் கொல்லப்பட்டது இந்திய இராணுவம்தானே என்பதால் இவ்விடயத்தை மக்கள் கண்டுகொள்ளாமல் இருந்தமை மனிதாபிமானமற்றதாகும். இது ஓர்வகையில் உதவிசெய்ய வந்தவர்கட்கு முதுகில் குத்தும் தன்மையானதே.

போர்ச்சூழலில், ஊரடங்கு உத்தரவு நேரத்தில் பொதுமக்கள் வைத்தியசாலைக்கோ ஏதேனும் அவசர காரியமாகவோ வெளியே செல்வதானால் வாகனத்தில் வெள்ளைக் கொடியுடன் செல்லலாம் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாகும். அப்பாவி மக்களுக்கிருந்த இச் சலுகைகளைக் கூடப் பாதிக்கும் வகையில் புலிகள் வெள்ளைக் கொடியுடனான வாகனங்களில் வந்தே இந்திய இராணுவத்தைச் சுட்டனர்.

அம்புலன்ஸ் வண்டிகள் எந்த நேரத்திலும் செல்வதற்கு அனுமதியுண்டு. நோயாளிகள், அவசர சிகிச்சை தேவைப்படுபவர்கட்கான இந்த வசதியையும் புலிகள் இல்லாதொழித்தனர். அம்புலன்ஸில் வந்தே இந்திய இராணுவத்தை சுட்டனர். எனவே, வெள்ளைக் கொடி கட்டிய வாகனமோ அம்புலன்ஸோ கூட கடும் கட்டுப்பாடுகள் சோதனைகளைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. ☞



படிப்பகம்

www.padippakam.com



'புலிகளே மக்களைக் காக்கின்றனர், மக்கள் நலனுக்காகவே அவர்கள் போராடுகின்றனர்' என இன்றும் உளறும் சிலர் புலிகளின் சுயரூபத்தைக் கண்டுகொள்ள வேண்டும் என்பதற்காகவே இவற்றைக் குறிப்பிட்டேன்.

## ஜீரணிக்க சிரமமான கசப்பு உண்மைகள்

ஆக, புலிகளால் வலிந்துருவாக்கப்பட்ட கண்மூடித்தனமான யுத்தம் யாழ்குடாவில் பெருமளவு மக்களைப் பலி கொண்டமையானது மொத்தத்தில் அமைதிப்படைக்கும், இந்தியாவிற்கும் எதிரான ஓர் ஆத்திரத்தையும். வெறுப்பையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது.

தமிழ்மக்களின் அரசியல் நலன், பாதுகாப்பு, கௌரவம், அனைத்திற்குமெதிராக புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்கள் உரிமைகளையும், பாதுகாப்பையும், கௌரவத்தையும் உத்தரவாதப்படுத்துவதற்



காக வந்த இந்திய இராணுவத்திற்கெதிராக வெற்றிகரமாகத் திருப்பப்பட்டது.

பாதுகாக்க வந்தவர்கள், ஆக்கிரமிப்பு இராணுவம் என முத்திரை குத்தப்பட்டனர். தமிழ் மக்களின் கொலைகளுக்கும், அழிவுகளுக்கும், அரசியல் தோல்விக்கும் மூலகாரணமானவர்கள் மாவீரர், போராளிகள் எனப்பட்டனர்.

இக்காலகட்டத்தில் அசலையும் நகலையும், உண்மைகளையும் மாய்யைகளையும் மக்கள் சரியாக அடையாளம் காணத் தவறியமைதான் அடுத்த 10 ஆண்டுகள் அழிவுக்கு வழிகோலியது. அவர்களது தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமை, அவர்கள் தேவை, விருப்பம், செயற்பாடு எதனையும் தீர்மானிக்கும் உரிமையை இழக்கக் காரணமாகியது.

யாழ்ப்பாணத்தில் ஓர் பெண், தான் கருத்தடை செய்யவேண்டுமா வேண்டாமா என்பதைக்கூட புலிகள் தீர்மானிக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது என்பதை நாம் ஜீரணித்தாக வேண்டும்.

## போர் ஒருபக்கம் பேச்சு ஒருபக்கம்

மக்கள் எல்லோருமே உண்மையை உணரவில்லையா? என்று கேட்டால், புலிகளை ஆதரித்தவர்களையும், இந்த பிரச்சார மாயைக்குள் வீழ்ந்து விட்டவர்களையும் தவிர உண்மையைப்புரிந்துகொண்ட எவரும் வாய் திறக்கமுடியாது, எழுத முடியாது என்ற நிலையைப் புலிகள் ஏற்படுத்தினர். அவ்வாறு எவரேனும் செய்தால் குறைந்தபட்சம் மரணதண்டனை என்பது குழந்தைக்கும் தெரியும்.

எனவே புலிகளை நியாயப்படுத்தி, ஆதரித்து கதைப்போர் மட்டுமே கதைத்தனர். எனவே அமைதியாக இருந்தவர்களும் புலி ஆதரவாளர்களே என்றே பிரச்சாரப்படுத்தப்பட்டது. அதனை உலகமும் ஏற்றுக் கொண்டது. ஆக, புலிகளின் கருத்தே மக்கள் கருத்து என்ற தோற்றப்பாட்டினைப் புலிகளின் துப்பாக்கிகள் வெற்றிகரமாக ஏற்படுத்தின.

1988 செம்டம்பர் வரை, ஒருபுறம் இந்திய அமைதிப் படை-புலிகள் சண்டையும், மறுபுறம் இந்திய அதிகாரிகள் புலிகள் இடையே பேச்சுவார்த்தையும் நடைபெற்றன. இலங்கையில் இந்தியப்படை-புலிகள் யுத்தம் முழுவீச்சில் நடக்கும்போதே சென்னையில் கிட்டு தலைமையில் புலிகளின் அலுவலகம் 100 பேர் வரையிலான உறுப்பினர்களுடன் ஆரவாரமாக இயங்கியது.

புலிகள் யுத்தத்தை நிறுத்துவதற்காக வட-கிழக்கு மக்களின் புனர்வாழ்வுக்கு புலிகளின் தலைமையில் ஓர் குழுவை உருவாக்குவதென்றும், அது இந்திய அதிகாரிகளைக் கொண்ட ஆலோசனைக் குழுவின் வழிகாட்டலின்படி செயற்படும் என்றும், இதற்கு 100கோடி ரூபா ஒதுக்குவது என்றும் ஓர் திட்டம் இந்திய அதிகாரிகளால் முன்வைக்கப்பட்டு. கிட்டுவுடன் பேச்சுவார்த்தை நடந்தது.

ஆனால் கிட்டுவோ, 'பணத்தை எவ்வாறு செலவழிப்பதென்பதை நாங்களே தீர்மானிப்போம். ஆலோசனை,மேற்பார்வை தேவையில்லை' என பணத்தைப் பெறுவதில் மட்டுமே குறியாக இருந்தார். இவ்வகையில் யுத்தம் தொடங்கியகாலம்முதல் ஏறத்தாழ 1988 இறுதிக்கட்டம் வரை (ஒரு வருடம்) சமாதான வழிக்குப் புலிகளைக் கொண்டுவரவும், யுத்தத்திற்கு முடிவுகட்டவும் இந்தியா புலிகளுடன் பலவிதமான முயற்சிகளைச் செய்தது.

இந்திய அரசு ஒருபுறம் யுத்தத்தை எதிர்கொள்வதிலும் மறுபுறம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர புலிகளுடன் பேசுவதிலும் தனது கவனத்தையும் நேரத்தையும் செல விட்டுவந்தது.

## ஜே.ஆர். கடத்திய திருத்தச் சட்டம்

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஒத்துக்கொள்ளப்பட்ட அதிகாரங்களை விடகுறைவான அதிகாரங்களையும் பலவீனமான அடிப்படைகளையும் கொண்டு தமக்குச் சாதகமான வகையில் ஓர் மாகாண சபை முறையை இரகசியமாக உருவாக்கி, பாராளுமன்றத்தில் தனக்கிருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தித் திடீரென பாராளுமன்றத்தில் நிறைவேற்றினார்.

13வது திருத்தச் சட்டத்தினையே ஜெயவர்த்தனாவினால் பாராளுமன்றத்துக்குள் கடத்தப்பட்டது என்று அரசியல் அவதானிகள் கூறுவதுண்டு. ஜே.ஆர். இவ்வாறு கபடத்தனமாக செயற்பட்டு தமிழ்மக்களை ஏமாற்ற, களம் அமைத்து விட்டவர்களும் புலிகளே. எனவே மாகாண சபை முறை பலவீனமானதாக உருவாக்கப்பட்டதற்கும் புலிகளே பொறுப்பேற்க வேண்டும்.

எனினும் ஜே.ஆரின் இந்த நரித்தனமான செயற்பாடு தமிழ் மக்களைப் பாதித்தது மட்டுமல்ல இந்தியாவிற்கும் ஓர் அவமதிப்பாகவே அமைந்தது. அதனால் இந்தியாவும் ஆத்திரமடைந்தது.

## ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் அரசியற் தூரநோக்கு

ஈ.பி.ஆர்.எல்.எவ். ஐப் பொறுத்தவரை இவ்வொப்பந்தத்தில் பலவீனங்கள் காணப்பட்டபோதும் தீர்வுக்கான ஆரம்பமாக இதனை எடுத்துக்கொள்வதன் மூலம் இந்திய அரசின் ஒத்துழைப்புடன் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வினைப் பெற்றுக் கொள்வதும், அதனடிப்படையில் வட-கிழக்கு இணைந்த ஓர் தன்னாட்சி அலகுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சி ஒன்றை உருவாக்கி, தமிழ்மக்களின் பாதுகாப்பையும் உரிமைகளையும் உத்தரவாதப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதாகவே இருந்தது. இவ்வகையில் இவ்வொப்பந்தத்தையும், இந்திய அரசின் ஒத்துழைப்பையும் அதிகபட்சம் எமது உரிமைகளை நிலைநாட்டப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற தெளிவான சிந்தனையின் அடிப்படையிலேயே செயற்பட்டது.

எனவேதான் ஆரம்பத்திலிருந்தே இந்தியஅரசுடனும் இந்திய இராணுவத்துடனும் ஒத்துழைத்து செயற்படுவது என்றும், அதன்மூலமே விடயங்கள் திசைமாறிப் போகாமல் பார்த்துக்கொள்ள முடியும் என்ற கணிப்புடன் செயற்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இனது மக்கள் நலன் அடிப்படையிலானதும், தூரநோக்குடனானதுமான இத் தெளிவான கொள்கையும், அதன் அடிப்படையிலான செயற்பாடுகளும் பின்னர் புலிகளாலும் இந்திய எதிர்ப்பு சக்திகளாலும் 'இந்திய அடிவருடிகள், இந்திய சார்பு இயக்கம்' என கொச்சைப்படுத்தப்பட்டு பிரச்சாரம் செய்யப்பட்டன. அவ்வாறு பிரச்சாரம் செய்த ஏராளம் பேர் 10ஆண்டுகள் கழித்து இன்று அது தவறு என பகிரங்கமாக ஒப்புக்கொள்ளும் நிலை ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் அரசியற் தூரநோக்குக்கு இது ஓர் சான்றாகும். ●

# மன்னார்-வவுனியா பயணமும் அவலமும்



மன்னாரில் இருந்து வவுனியா பயணம் செல்லும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையானது நாளாந்தம் அனுபவிக்கும் யுத்த பயப் பீதிகளை விட மிகமோசமானது. ஒருவர் வவுனியா செல்ல வேண்டுமாயின் அவர் காலை 8மணிக்கு பாஸ் அலுவலகத்திற்கு வரவேண்டும். 8மணியில் இருந்து 10-11மணிவரை கியூவில் நின்று, பயணத்திற்குரிய பாஸ் அனுமதிகள் பெறவேண்டும்.

அதன்பின்னர் படையினரின் சோதனைக் கெடுபிடிகளுக்கு மத்தியில் கிடைக்கும் பயணஅனுமதியுடன் பஸ்வண்டியில் ஏறி இரு மணித்தியாலங்கள் நிற்கவோ அல்லது 'சீற்' கிடைத்தால் இருக்கவோ முடியும்.

அதன்பின் பஸ் வண்டி புறப்பட்டு உயிலங்குளம் சென்றதும் இரு மணித்தியாலங்கள் வரை படையினரால் நிப்பாட்டி வைக்கப்பட்டு ராணுவக் கட்டுப்பாடு அற்ற பிரதேசத்திலிருந்து வரும் மக்களையும் ஏற்றிக் கொண்டு பஸ்வண்டி புறப்படும்போது மதியம் 2.00மணியாகின்றது.

மன்னாரில் இருந்து வவுனியா செல்ல பயண நேரம் இரண்டரை மணித்தியாலங்கள் பிடிக்கின்றன. மற்றும் பூவரசங்குளம் பாஸ்எடுப்பதற்கு ஒருமணிநேரம் பிடிக்கின்றது.

இப்படியாக வவுனியாவந்து சேர 9 மணித்தியாலங்களுக்கு மேலாக தண்ணீர்வெந்நீர் இன்றி பயணம் செய்ய வேண்டியதாக உள்ளது.

## பஸ் வண்டிகள் பற்றாக்குறை

பஸ்வண்டிகள் மிகமிக குறைவாகக் காணப்படும் பிரதேசமாகவே இன்னும் மன்னார் இருந்து வருகின்றது. மாவட்டத்திற்கு ஆக மொத்தம் 32 பஸ்வண்டிகள் மட்டுமே உள்ளன. இதில் சேவையில் 20பஸ்வண்டிகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. 12வண்டிகள் பழுதடைந்த நிலையில் உள்ளன.

இப்படியான நிலையில் உள்ளூர் சேவைகளையே ஓர் ஊருக்கு இருதடவைக்குமேல் சேவையில் ஈடுபடுத்த முடியாமல் டிப்போ நிர்வாகம் திண்டாடுகிறது. இப்படியான நிலையில் பிற மாவட்டங்களுக்கான (வவுனியா, கற்பிட்டி, கொழும்பு) ஆகிய இடங்களுக்கும் இருக்கக் கூடிய இவ் வண்டிகளுக்குள்ளேயே சேவை நடைபெறுகின்றது.

ஒரு பஸ்வண்டியில் 48 'சீற்' உள்ளது. 20பேர் மட்டில் நின்று பயணம் செய்யலாம். ஆனால் மன்னார், வவுனியா சேவையில் ஈடுபடும் பஸ்வண்டிகள் ஒவ்வொன்றிலும் 90ல் இருந்து 120 பேர் வரை பிரயாணம் செய்கின்றார்கள். மன்னாரில் இருந்து வவுனியாவிற்கு நாளாந்தம் 300ல் இருந்து 500பேர் வரை பயணம் மேற்கொள்கின்றார்கள். இவ்வளவு பேரும் பயணம் செய்வதற்கு மன்னார் டிப்போவால் அமர்த்தப்படும் பஸ்வண்டிகள் 2-3ஆகும்.

இப்படியான சீர்கெட்டநிலையில் பயணம் செய்யும் மக்களில் கூடுதலானோர் நோய்வாய்ப்பட்டவர்களே ஆவார்கள். இப்படியானதோர் பயணத்தால் இவர்களின் உடல்நிலை மோசமாகவே பாதிக்கப்படுகின்றது. இதனால் அதிகமானோர் தனியார் வண்டிகளில் பயணம் செய்யவேண்டி உள்ளது. இதைச் சாதகமாக பயன்படுத்தும் தனியார் வண்டி உரிமையாளர்கள் அரச வண்டியை விட மூன்று மடங்கு அதிகமான பணம் ஒரு நபரிடம் வசூலிக்கின்றார்கள்.

இப்படியான அவல நிலைகளுக்கு மன்னார், வவுனியா டிப்போ அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டியுள்ளது. இப்படி மோசமான கெடுபிடிகள் சிரமங்கள் துன்பங்கள் நிறைந்ததாக உள்ளது இப்பயணம். அரச அதிகாரிகட்கு அல்லது இம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் பிரதிநிதிகளுக்கு இப்படியான பிரச்சினைகள் தெரிவதில்லை.

ஏனென்றால், இவர்கள் தங்களுக்கு அரசால் வழங்கப்படும் தனித்தனி வாகனங்களில் சௌகரியமாக பயணம் செய்கின்றார்கள். அதுவும் இப்படியான பிரதேசங்களுக்கு வருடத்தில் ஓரிரு தடவைகள் மட்டும் வந்து போகின்றவர்களுக்கு இவ்விடயங்கள் எப்படிப் புரியும் என்று துன்பங்களுக்கு உள்ளாகும் மக்கள் குமுறுகின்றனர்.

எனவே இப்பகுதி மக்களின் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசு உடன் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இதில் முதல் நடவடிக்கையாக பழுதடைந்த நிலையில் தள்ளப்பட்டிருக்கும் பஸ் வண்டிகளைத் திருத்தி உடன் சேவைக்கு ஈடுபடுத்த வேண்டும்.

மேலதிக தேவைகளைப் பொறுத்து புதிய பஸ் வண்டிகளை அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். இவற்றைவிட கொழும்பு, கற்பிட்டி, வவுனியா போன்ற தூர தேசங்களுக்கு பிரயாணம் செய்யும் பயணிகளுக்கு பஸ்ஸினுள் இடநெருக்கடியினால் ஏற்படும் சிரமங்களைத் தீர்க்குமுகமாக ஒவ்வொரு வண்டியிலும் வரையறுக்கப்பட்ட அளவிற்கு மேலாக ஆக்களைத் திணிக்காது, பயணிகளின் தொகைக்கேற்ப தற்போதுசேவையில் உள்ள வண்டிகளை விட மேலதிக வண்டிகளை சேவைக்கு ஈடுபடுத்த வேண்டும்.

அடுத்து சோதனைச் சாவடிகளில் பயணிகளை நீண்ட நேரமாக தடுத்து வைத்து கௌரவக் குறைவாக நடத்துவ்து மிகவும் வேதனைக்குரிய ஓர்விடயமாகும். எனவே சோதனைச் சாவடிகளில் பயணிகளின் நலன்களைப் பாதிக்காதவாறு தங்கள் சோதனைச் சாவடி ஒழுங்குமுறைகளைத் திட்டமிட்டு நடைமுறைப் படுத்தவும் வேண்டும்.

இந்நெருக்கடிகளுக்கு அரசு பாரபட்சம் காட்டாது உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

ச. ரெட்ணசிங்கம் (குமரேஷ்)
பிராந்திய செயலாளர்
ஈ.பி.ஆர்.எல்.எவ்.



பதவிகள் மீது தனக்கு பெரிய பிடிப்பு எதுவுமில்லை என்பதைச் சொல்ல இன்றைய இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நீண்ட நாட்களுக்கு முன்பே எழுதிய கவிதை:


மிக உயரமான மலைகளில்
மரங்கள் வளர்வதில்லை. புல்கூட
முளைப்பதில்லை. மரணத்தைப்
போலக் குளிராக, சவத்
துணியைப் போல் வெள்ளையாக
வெறும் பனி மட்டுமே
மலையுச்சியில் இருக்கிறது.
இத்தகைய மலையாக என்னை
ஆக்கிவிடாதே கடவுளே.... நான்
அடிவாரங்களையே விரும்புகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



# புலிகளின் போக்கும் தமிழ்க் கட்சிகளின் தந்திரமும்



சங்கிலியன் படையணியின் அரசியல் பிரிவு வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரம் ஒன்று அண்மையில் யாழ்குடா நாட்டில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினருடன் தொடர்புகள் வைத்துக்கொள்ள வேண்டாம் எனவும் தமிழ்க்கட்சி அலுவலகங்களுக்கு சென்று பிரச்சினைகளுக்குள் சிக்கிக் கொள்ள வேண்டாம் எனவும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதோடு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெரிவான பிரதிநிதிகள் பதவி விலக வேண்டுமெனவும், தமிழ் கட்சிகளை தமது அலுவலகங்களை கொழும்பிலேயே வைத்துக் கொள்ளுமாறும் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி என்ற பெயரில் நீங்கள் செய்யப்போவது என்ன? கைதுகள், காணாமல் போதல்கள், பாலியல் பலாத்காரங்கள் போன்றவை தொடர்கின்றன. உங்களால் நிறுத்த முடிந்ததா? எனறும் துண்டுப்பிரசுரம் ஜனநாயக வழிக்கு வந்தவர்களை நோக்கி கேள்வி எழுப்புகிறது.

ஆயுதங்களை கைவிட்டு ஜனநாயக வழிக்கு திரும்பிக்கொண்டிருக்கும் தமிழ்க்கட்சிகள் இதற்கு என்ன பதில் கூறப்போகிறார்களோ தெரியவில்லை. ஆனால், ஆயுதப் போராட்டமும் இந்த கைதுகள், காணாமல் போதல்கள், பாலியல் பலாத்காரங்களை தடுத்து நிறுத்திவிடவில்லையே என்று ஒரு போடு போட்டார் பழம் பெரும் கட்சிக்காக உள்ளூராட்சிமன்ற தேர்தல் பணிகளில் பறந்து திரிந்த ஒரு பழுத்த பழம்.

புலிகளே இந்த துண்டுப்பிரசுரத்தினை வெளியிட்டுள்ளார்கள் என்பது அனைவரும் அறிந்த இரகசியம். துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களில் அனேகமானவை புலிகள் தெரிவித்து வரும் கருத்துக்களை ஒத்ததாகவே உள்ளன.

அது மாத்திரமல்ல தமிழ் மக்களிடம் இத்தகைய ஓர் எச்சரிக்கையை அல்லது வேண்டுகோளை விடுப்பதற்கான அருகதை, பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவகாரங்களை செயற்படுத்தும், அமுலாக்கும் ஆளுமை, எச்சரிக்கைக்கு பணிய மறுப்பவர்களை தண்டிக்கும் பலம் யாவும் புலிகளிடமே உண்டு.

எனவே புலிகள் தமது பெயரில் துண்டுப் பிரசுரத்தினை வெளியிடாமல் ஏன் சங்கிலியன் படையணியின் பெயரில் வெளியிட்டுள்ளார்கள் என்ற கேள்வி எழுகிறது.

புலிகள் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் தமிழ் சமூகத்தை பயமுறுத்தியே அனேக காரியங்களைச் சாதித்து வருகிறார்கள். ஆனால், அவ்வாறு பயமுறுத்திப் பணிய வைப்பதனை, இணங்கச் செய்வதனை புலிகளும், அவர்களுக்காக வக்காலத்து வாங்குபவர்களும் ஒப்புக்கொள்வதில்லை.

புலிகளுக்கு மக்களின் மனப்பூர்வமான ஆதரவு இருப்பதாகவே காட்டிக்கொள்ள விரும்புகிறார்கள். இந்தப் பிரசுரம் புலிகளின் பெயரில் வெளியிடப்பட்டால் புலிகளின் மிரட்டிப் பணிய வைக்கும் நடவடிக்கைகளுக்கு அதுவே ஆதாரமாக அமைந்துவிடும்.

புலிகள் மாற்றுக் கருத்துக்களை அங்கீகரிப்பதில்லை; கருத்துமாறுபாடு கொண்டவர்களை கூட துரோகிகளாக சித்தரித்து தண்டனை வழங்கி வருகிறவர்கள் தமிழ்சமூகத்திற்கு, தனிமனிதனுக்கு அரசு விட்டுவைத்திருக்கும் அற்ப, சொற்ப அடிப்படை உரிமைகளைகூட புலிகள் விட்டுவைக்கவில்லை.

புலிகளின் இந்தப் போக்கு ஜனநாயகஉரிமைகளை பேணிக் காக்கும் சர்வதே சமூகங்களிடமிருந்தும், மனித உரிமைகளிற்காக குரல்கொடுப்பவர்கள், ஜனநாயக பண்புகளை நிலைநிறுத்த உழைப்பவர்கள் மத்தியிலும் புலிகளுக்கு அபகீர்த்தியை உண்டுபண்ணி வருகிறது.

எனவே ஒரு சமூகத்தில் சிவில் உரிமைகளான– வாழ்வதற்கான உரிமை, சிந்திப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமான உரிமை, ஒன்றுகூடும் உரிமை என்பனவும், அரசியல் உரிமைகளான– வாக்களிக்கும் உரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை, போன்றவற்றையும் மறுக்கும்இது போன்ற ஒரு துண்டுப்பிரசுரம்



நிச்சயமாக தமக்கு களங்கத்தை ஏற்படுத்தும், பாதகமாய் அமையும் என்பதனைக் கணிப்பிட்டே புலிகள் சங்கிலியன் படையணியின் பெயரில் துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டுள்ளார்கள்.

இந்தப் பிரசுரம் மக்கள் மத்தியில் என்ன பிரதிபலிப்பை ஏற்படுத்துகிறது என்பதனை நாடி பிடித்தறியும் ஒரு நடவடிக்கையாகவும் இருக்கலாம். மக்கள் மத்தியில் இதில் தெரிவிக்கப்பட்ட விடயங்களுக்கு அங்கீகாரம் இல்லையெனின், எதிர்ப்புணர்வு தோன்றுமாயின் குறிப்பிட்ட நடவடிக்கைகள் கைவிடப்படலாம் அல்லது தாமதப்படலாம்.

இவ்வாறு ஏற்படும் பின்னடைவும், புலிகளின் தோல்வியும் இமேஜை பாதிக்கக் கூடாது என்பதும் புலிகள் தமது பெயரில் துண்டுப்பிரசுரத்தை வெளியிடாதமைக்குக் காரணம். புலிகளின் தவறுகளை உடனடியாக கண்டிக்கும், விமர்சனம்செய்யும் திராணி இங்கு யாருக்கும் இல்லை என்பதும் புலிகளுக்கு தெரியும்.

இது குறித்து இதுவரை யாரும் கருத்துக் கூறவில்லை என்பதே அதற்கு அடையாளம். வெளிப்படையாகக் கருத்து சொல்வது ஆபத்தானது என்பதால் தயக்கத்தை ஏற்படுத்தினாலும் அடக்குமுறைகளுக்கு எதிரான உணர்வு வெகுஜனங்களிடையே மேற்கிளம்புவதைத் தடுக்க முடியாது என்பதும் புலிகளுக்குத் தெரியும்.

அதுமாத்திரமல்ல சர்வதேச சமூகத்தினது ஆதரவை ஏற்கனவே இழந்து நிற்கும் புலிகள் மேலும் தமக்கு அபகீர்த்தியை உண்டுபண்ணும் நடவடிக்கைகளை தவிர்க்க எண்ணியிருக்கக் கூடும்.

எது எப்படியாயினும் விடுதலைப் புலிகள் கடந்தகாலத் தவறுகளிலிருந்தும் கற்றுக்கொண்டுள்ளார்கள், தமது தவறுகளை மீள் பரிசீலனை செய்து தமது போக்கை மாற்றிக் கொண்டுள்ளார்கள், ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிக்க முன்வந்துள்ளார்கள் என வாய்கிழியப் பேசியவர்கள், வக்காலத்து வாங்கியவர்களின் முகத்தில் அறைந்தது போல சங்கிலியன் படையின் பிரசுரம் வெளியாகியுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினையை புலிகளுடன் பேசித் தீர்வுகாணுமாறு தமிழ்க்கட்சிகள் கூறிவருவதை அறிவீர்கள். தாங்கள் ஒரு அரசியல் கட்சி என்பதை மறுதலிக்கும் வகையில், புலிகளுடன் பேசி பிரச்சினையை தீர்க்குமாறு கூறி அவர்களே புலிகளின் முன்னணி அமைப்புகள் போல செயற்பட்டு வருகிறார்கள்.

புலிகளை பகைத்துக் கொள்ளாமல் புலிகளுக்கு நண்பர்கள் போலக் காட்டிக் கொண்டால் புலிகள் தமது செயற்பாடுகளுக்கு இடையூறாக இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் செயற்பட்டு வருகிறார்கள்.

புலிகள் தம்மை நிலைப்படுத்தும் வரை ஏனைய அமைப்புக்களை நோக்கி துப்பாக்கிகளை திருப்பவில்லை என்பது உண்மை. அந்த தற்காலிக மோதல் தவிர்ப்பும் முடிவுக்கு வந்துவிட்டது என்பதையே சங்கிலியன் படையணியின் துண்டுப்பிரசுரம் சுட்டிக்காட்டுகிறது. ஆனாலும் புலிகள் எல்லா அமைப்புக்களையும் ஒரே நேரத்தில் விரோதித்துக்கொள்ளப் போகின்றார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தமிழ்கட்சிகள் கூறுவது போலப் புலிகளிடம் பேசி பிரச்சினையைத் தீர்க்குமாறு சொல்வதற்கு ஒரு அரசியல்கட்சி வேண்டுமா? அரசியல் கட்சியின் பணி அதுதானா? என்ற கேள்விகள் ஒரு புறமிருக்க, இதனையும் இவர்கள் இதயசுத்தியுடன் தெரிவிக்கிறார்களா? என்றால் அதுவும் இல்லை. இது புலிகளுக்கும் புரியாதது இல்லை.

இரண்டு தரப்பிற்குமே உள் நோக்கம் உண்டு. "புலிகளுடன் பேசு"என சாத்தியமாகாதுஎன்று நம்புகின்ற இந்த கோஷத்தைச் சொல்லிச் சொல்லியே தமது செயற்பாடுகளை விஸ்தரித்துக் கொள்ளலாம், தப்பிப் பிழைக்கலாம், யுத்தம் தொடர்ந்து நடைபெறுவதால் புலிகள் வலுவிழந்து பலவீனமடைவார்கள், அது தமக்கு வாய்ப்பாய் அமையும் என்பது சிலரின் எதிர்பார்ப்பு.

புலிகளுடன் பேசித்தான் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்ற உண்மையான விருப்பம் இவர்களுக்கிருந்தால், அதுதான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஒரே வழி என்று கருதினால், புலிகளுடன்பேசி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நியாயமான நிலையான தீர்வினைக் கண்டுவிடலாம் என நம்பினால் புலிகள் கூறுவது போலவே, தமது செயற்பாடுகளை நிறுத்தி புலிகளுக்கு வழிவிடவேண்டியதுதானே.

ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் சந்திப்புக்கு அழைப்பு விடுக்கும்போது, "எங்களுடன் பேசிப் பிரச்சினை தீராது பிரச்சினை தீரவேண்டுமானால் புலிகளை அழைத்துப் பேசுங்கள்" என்று கூறி, அரசாங்கத்தின் அழைப்பை ஏன் நிராகரிக்கக் கூடாது?

இதையெல்லாம் செய்ய மாட்டார்கள். ஏனெனில் முன்னரே குறிப்பிட்டது போல இவர்களது உள்ளக்கிடக்கை வேறு. 'அண்ணன் எப்போ சாவான்? திண்ணை எப்போ காலியாகும்?' என்பதே அது. புலிகளையும் தாஜா பண்ணி மக்களையும் ஏமாற்றும் தந்திரம்தான்"புலிகளுடன்பேசு" என்ற கோஷம்.

- விதுரன்

## அருட்தந்தை வெபர் அடிகளார் மறைவு மட்டக்களப்பிற்கு பேரிழப்பு.



அமெரிக்க நாட்டில் பிறந்து வளர்ந்து இறைபணிக்கென தன்னை ஒப்புக்கொடுத்து இயேசு சபைத் துறவியாகி, ஐம்பதுவருடங்களுக்கு முன்னர் நமது நாட்டிற்கு காலடியெடுத்து வைத்த வெபர் அவர்கள், மட்டக்களப்பு மண்ணை தனது தொண்டுக்கான களமாக தேர்வு செய்து செயற்பட்டார்.

கல்வி வளர்ச்சிக்கும், விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுத்து மட்டக்களப்பு மாநகரில் இளைஞர்களின் விளையாட்டு ஆர்வத்தை அவதானித்து அவர்களை விளையாட்டுத்துறையில் ஊக்குவிக்க பெரும்பணியாற்றினார்.

சிறந்த விளையாட்டு மைதானம் ஒன்று தேவையென உணர்ந்த அடிகளார் மாநகரின் மையப்பகுதியில் விளையாட்டு மைதானம் ஒன்றை அமைக்க அயராது உழைத்தார். இவரின் முயற்சியால் உருவாக்கப்பட்ட மைதானத்திற்கு மட்டக்களப்பு மாநகரசபை "வெபர் அரங்கு" எனப் பெயரிட்டு அவருக்கு நன்றிக்கடன் செய்தது. விளையாட்டு வீரர்களுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள், சீருடைகள் என்பனவற்றை வாரிவழங்கினார். மட்டக்களப்பில் பல இளைஞர்கள் தேசியகளம் காண வைத்ததில் இவரின் பங்கு மிகப் பெரியதாகும். சிறுவர்களுடன் அன்பாய் பழகி, பிஞ்சு உள்ளங்களின் ஆசைகளைப் புரிந்துகொண்டு அவர்களுக்குப் பல உதவிகளைச் செய்துள்ளார்.

இவரது அயல்நாட்டுத் தொடர்புகள் மூலம் கல்வி வளர்ச்சிக்கான அனைத்து காரியங்களையும் செய்தார். புனித மிக்கேல் கல்லூரியின் வளர்ச்சியிலும் இவரது உழைப்பு மிகுதியும் உண்டு.

மட்டக்களப்பு மண் யுத்தத்தின் உச்சநிலையில் சிவப்பாக மாறியபோதும், நகரில் குண்டுமழை கொட்டியபோதும், பலப்பல துக்ககர நிகழ்வுகள் நடந்தபோதும் அவர் அமெரிக்கா ஓடிவிட நினைக்கவில்லை. தனது ஆத்மாவை மட்டக்களப்பு மண்ணிற்கே அர்ப்பணிக்க விரும்பினார். அவரது விருப்பப்படி உடல், அவர் வளர்த்த மிக்கேல் கல்லூரியிலேயே அடக்கம் செய்யப்பட்டது. அம்மனிதரையும், அவர் ஆற்றிய சேவைகளையும் என்றும் எப்போதும் நினைவு கூர்ந்து நிற்போம்.

- பிராந்தியகமிட்டி, மட்டக்களப்பு.

www.padippakam.com




"இனியாவது ஒன்றுபட்டு சமுகத்தை நாம் முன்னேற்ற வேண்டும்"

"அபிவிருத்திக்காகவாவது தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்"

"ஐக்கியம் மூலமே தமிழர்கள் போராட்டத்தில் வெல்லலாம்"....

– இவை யாவும் தமிழ்க்கட்சிகளின் மேதின மேடையில் கேட்ட முழக்கங்கள். அத்தனையும் மக்களின் விருப்பங்களைப் பிரதிபலிப்பவையாயுள்ளன. இவ்வாறு மேடையில் முழங்கும் கட்சிகளால் இன்னும் ஒன்றுபட்டு செயலாற்ற முடியாமல் உள்ளதைக் காணும்போது, இந்த வார்த்தைகள் இவர்களின் உள்ளத்திலிருந்து வருகிறதா? உதட்டிலிருந்து வருகிறதா? என்று சந்தேகம் எழுகிறது.

மக்கள் எதை விரும்புகிறார்களோஅதனை மேடையில் பேசி கைதட்டல் வாங்கும் அரசியல்வாதிகள் மேடையைவிட்டு கீழே இறங்கியதும் அதனை மறந்துவிடுகிறார்கள். தாங்கள் பேசிய அனைத்தும் பத்திரிகைகளில் வந்துவிட்டால் அத்தோடு திருப்திப்பட்டுக் கொள்கிறார்கள்.

தமிழ்க்கட்சிகளும் இத்தகைய குறுகிய நோக்கங்களுடன் செயற்பட்டு வருகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. உண்மையில் இவர்கள் கூறுவதுபோல அனைவரும் ஒற்றுமையில் அக்கறை உடையவர்களாயிருப்பின் ஒற்றுமை ஏன் இன்னும் எட்டாக் கனியாக இருக்கிறது?

மேதின மேடையில் ஒற்றுமை பற்றி பேசுபவர்களுக்கு, தொழிலாளர் ஐக்கியப்பட வேண்டும் என அறைகூவல் விடுப்பவர்களுக்கு வட–கிழக்கு முழுவதும் தொழிலாளர் தினமான மேதினத்தைக் கூட கூட்டாக அனுஷ்டிக்க முடியவில்லை. "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!" என தனித்தனியே நின்று கூவுகிறார்கள்

மட்டக்களப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ஈ.பி.டி.பி. ஆகிய மூன்று கட்சிகளும் கூட்டாக மேதினத்தை அனுஷ்டித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். இரு கட்சிகளும் கூட்டாக மேதினத்தை அனுஷ்டித்தனர். அதேவேளை வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஒட்டிய மேதின சுவரொட்டிகளில் அனேகமானவற்றைமூடி புளொட் அமைப்பைச் சேர்ந்தவர்கள் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

ஒருபுறத்தில் ஒற்றுமை பற்றி மக்கள் முன் வலியுறுத்திக் கொண்டே மறுபுறத்தில் ஒற்றுமைக்கு எதிராக செயற்படுவதை கண்முன்னே காணமுடிகிறது. எனவே மக்கள் மத்தியில் ஒற்றுமைபற்றி வலியுறுத்துகின்றஅதே சமயம் கட்சிஅங்கத்தவர்கள் மத்தியிலும் ஒற்றுமையை வலியுறுத்த வேண்டிய கடமை கட்சித் தலைவர்களுக்கு உண்டு.

ஏற்கனவே நடந்து முடிந்த கசப்பான சம்பவங்களால் ஒற்றுமை சாத்தியமற்ற ஒன்றாகப் போயிருப்பினும், ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்து எதிர்காலத்திலாவது அதனை சாத்தியமுள்ளதாக்க தமிழ்க்கட்சிகள் இதயசுத்தியுடன் செயற்படவேண்டும். ஒற்றுமைக்குத் தடையாகவுள்ள செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்வதே அதற்கு வழி.

"மக்கள் தம்மை நாடி வருகின்ற தமிழ்க்கட்சி பிரதிநிதிகள், இளைஞர்களிடம் ஒற்றுமையை வலியுறுத்த வேண்டும்" என புளொட் இயக்க உப–தலைவர் மாணிக்கதாசன் யாழ்ப்பாணத்தில் நடந்த மேதினக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

மக்கள் ஒற்றுமைபற்றி வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். நடந்துமுடிந்த உள்ளூராட்சிசபை தேர்தல் சமயத்தில் பெரும்பாலனவர்களின் கருத்து அதுவாகத்தானிருந்தது. தமிழ்க் கட்சிகள் மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்ப்பதில்லை என்பதுதான்கசப்பானஉண்மை.

எனவே கட்சிகள் முதலில் மக்களின் ஜனநாயக உரிமையினை மதித்து அவர்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க வேண்டும். அத்தகைய ஒரு சூழலில் மட்டுமே அவர்களும் தமது கருத்துக்களை வெளிப்படையாக கூற முன்வருவார்கள் என்பதும் கவனிக்கப்படவேண்டும்.

'எந்த இலக்கை அடைவதானாலும் அதற்காக தேர்ந்தெடுத்திருக்கும் மார்க்கம் நியாயமானதாக இருக்கவேண்டும்' என்றார் அஹிம்சாமூர்த்தி காந்தி. இந்தியா முழுவதும் உள்ள மக்களை, இந்தியாவின் அனைத்து சக்திகளையும் ஓரணியில் கொண்டு வந்து இந்திய சுதந்திரம் என்ற கனவை நனவாக்கி காட்டியவர் காந்திமகான்.

அஹிம்சை வழியிலேயே நம்பிக்கை கொண்டவர்கள் என்று கூறினாலும், கூட்டணிக்கு ஒற்றுமை என்றாலே வேம்பாகக் கசக்கிறது.

'தமிழ்மக்கள் ஒத்துக்கொள்ளக்கூடிய வகையில் தீர்வுத்திட்டம் நிறைவேற்றப்படவேண்டும்; தமிழ் மக்கள் அனுபவித்துவரும் இன்னல்களைப் போக்க வேண்டும்' என மேதின மேடையில் முழங்குகிறது கூட்டணி.

கூட்டணி தமிழ்மக்கள் சார்பில் முன்வைக்கும் கோரிக்கைகள் நியாயமானவை. ஆனால் அவற்றை அடைவதற்கு கூட்டணி தேர்ந்தெடுத்துள்ள மார்க்கம் தான் என்ன? தனி வழிதான் மார்க்கமா? ஒன்றுபட்டுப் போராடாமல் கூட்டணி எண்ணுவதை தானும் சாதிக்க முடியுமா?

என்ன செய்யப் போகிறோம், எப்படிச் செய்யப் போகிறோம் என்ற தெளிவில்லாமல் திரும்பவும்அதே பழைய பாணியிலேயே உணர்ச்சியூட்டி உசுப்பிவிடலாம் என்ற தப்பான எண்ணத்தில் உணர்ச்சிவசப்பட்டுப் பேசி வருகிறார்கள்.

இவர்களோடு என்ன கூட்டு? என்று ஒதுங்கிநிற்கிறது ரெலோ. தமிழ்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து நடாத்தும் மேதின கூட்டங்களில் ரெலோ கலந்து கொள்ளாது, ஒத்துழைப்பும் வழங்காது என ரெலோ முதல்வர் கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.


ஏனைய கட்சிகளுடன் கூட்டு வைத்துக்கொள்ளமுடியாத அளவிற்கு தனித்துவம் மிக்கவர்கள் என்று, ரெலோ கொள்கைப் பிரகடனங்கள்மூலம் காட்டிக்கொள்ள நினைப்பது போல் அவர்களின் நடைமுறைகள் இல்லை.

கூட்டணியாகட்டும், ரெலோவாகட்டும், ஏன் கூட்டு சேர்ந்து மேதினத்தை நடாத்திய இதர கட்சிகளாகட்டும் இவை அனைத்தும் ஓரணியில் நின்று தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்க முடியாமைக்கு காரணம் குறுகிய கட்சிநலனே அன்றி வேறில்லை. மக்கள் நலனைக் காட்டிலும் தமது சொந்த நலனை உயர்ந்தஇடத்தில் வைத்துக் கொண்டிருப்பதுமே இவர்கள் ஐக்கியப்பட முடியாமைக்கு காரணம் ஆகும்.

ஒன்றுபட முடியாமல் போனதற்கு கொள்ளை ரீதியாக பல விளக்கங்கள் காரணங்களை இவர்கள் கூறித் தப்பிக்கொள்ளலாம். ஆனால், "தமிழ்மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதுதான் தமிழ்க் கட்சிகளின் அடிப்படை நோக்கமாக இருக்குமாயின் என்ன விலை கொடுத்தாவது இக்கட்சிகள் ஐக்கியப்பட்டு குரல் கொடுக்காமல் அது சாத்தியமில்லை" என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் செயலாளர் நாயகம் மேதினசெய்தியில் குறிப்பிட்ட விடயமே நிதர்சனமானது.

ஆக, மேதினத்தில் ஏற்பட்ட ஐக்கியம் மேதினத்துடன் அற்றுப் போகாமல் நீடித்து நிலைக்க சம்பந்தப்பட்ட கட்சிகள் தயாராக வேண்டும். ●

# குறுக்கெழுத்துப் போட்டி–36




## இடமிருந்து வலம்

1. இம்மாதம் வந்த பௌத்தர்களின் பண்டிகை.
3. மனைவி.
6. ஒழுங்குமுறை அல்லது ஊழ்.
8. வினையாக–'துள்ளு'; பெயராக–'உள்ளங்காலின் பின்பகுதி'.
9. நிலா உதித்தல். எம்.ஜி.ஆர். படம் ஒன்று, அதில் இதுவே ஒரு பெண்ணானதோ என்று பாட்டு.
11. எளிதில் எதையும் புரிந்துகொள்ளத் தெரியாதவனைக் குறிப்பது. வாத்தியார் பிள்ளை இப்படி இருந்து விடுவதுண்டு.
13. விருப்பத்துக்கு மாறாக ஏற்கச் செய்யும் பலவந்தம்.
14. அம்பாறை மாவட்டத்திற்கு மாற்றப்பட்ட பெயர்.
16. நெருப்பில்லாமல் இல்லை. (தலைகீழ்)
17. ஒயிலான நடையுடை பாவனையுடைய அழகிய பெண் குழம்பி நிற்கிறாள்.
21. இதோ, இந்த நேரத்தில்.
24. குழந்தைப் பாக்கியம். குறளில் ஏழாம் அதிகாரம்.
27. வீட்டுக்கு நாய் என்றால் சரி; ஆனால் பாலுக்குப் பூனையா? (தலைகீழ்)
28. பகையுணர்வில் எழும் ஆழ்ந்த வெறுப்பு. இனரீதியில் இங்கு ஏற்பட்டதால் இத்தனை அழிவும்.
29. சேறான பகுதிக்கு கடைசி எழுத்தில்லை.
31. அப்பளம் போல் எண்ணெயில் பொரித்து எடுக்கப்படும் ஓர் உணவுப் பண்டம். (தலைகீழ்)
32. மேடு. (குழம்பி)
34. கோயில் நுழைவாயிலில் நிமிர்ந்து உயர்ந்து இருப்பது, இங்கு தலைகீழாக.
35. கறள்.

## மேலிருந்து கீழ்

1. சன்மானம்.
2. பழுப்பு நிறமும் மணமும் உடைய உருண்டை வடிவம், மருந்தாகப் பயன்படுவது. முன்பகுதியில் குலமும், பின்பகுதியில் பழத்தின் இளமையும்.
3. போத்துக்கீசர்களுக்குப் பின் நம் நாட்டைப் பிடித்தவர்களின் நாடு. (தலைகீழ்)
4. இலக்கியத்தில் ஒழுக்கம். அகம், புறம் எனப் பிரிக்கப்பட்டிருக்கிறது. (தலைகீழ்)
5. எதிரி.
6. ஆச்சரியம்.
7. பூட்டான் தலைநகர்.
10. முருகன் அமர்ந்திருக்கும் மலைகளில் ஒன்று.
12. இளம் பெண்.
15. "----- விளையாடு, விருப்பம்போல உறவாடு, வீரமான நடையைப் போடு" (தலைகீழ்)
18. 'பா' சேர்ந்தால் தந்தை.
19. பத்திரமாக இருக்க இது வேண்டும்.
20. இணக்கமான முடிவு.
21. பெருமிதம்.
22. கம்பூச்சியாவில் இலட்சக்கணக்கான கொலைகளுக்குக் காரணமானவர் என்று கூறப்பட்ட இவர் சமீபத்தில் இறந்தார்.
23. தலைகீழாக இருப்பது தவறுதான்.
25. கன்னச் சதை அல்லது கூந்தல்.
26. வைரக் கற்கள் பதித்த ஒருவகை மூக்குத்தி.
30. தோட்டத்திலிருக்கும் நீர்நிலை, கிணறுக்காகத் தோண்டப்படும் குழி இது. கடைசி எழுத்தில்லை.
33. ஆடிக்குப் பின்னால் ஆவணி, இதற்குப் பின்னாலும் ஒரு தாவணியா? (தலைகீழ்)

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி–35 விடைகள்:

**இடமிருந்து வலம்:**

1. சோலி
3. பள்ளிக்கூடம்
7. அத்வானி
8. வறட்சி
10. காம(ன்)
11. காமதேனு
14. பாதசரம்
16. வந்தனம்
18. அணியம்
19. திக்கு 20. ரிஷபம்
22. கோமான்
24. புரட்டாசி
27. புரட்சி
28. ஜம் 29. கத்(தி)
30. பன்னாடை
31. சக்தி
32. கம்மாலை
33. அரை

**மேலிருந்து கீழ்:**

1. சோனியாகாந்தி
2. வாலி
3. அனுபவம்
4. பாட்டாளி
5. கூடு
6. அம்மணம்
9. சிதம்பரம்
10. காரணி
12. மனக்கோட்டை
13. தேவகுமாரன்
15. சயம்பு
17. தரி
21. ஷட்ஜமம்
23. புன்னாலை
25. அக்கடா
26. சித்திரை
27. தபசி

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

வீ. நிமலன்
முதலாம் குறுக்கு தெரு
வவுனியா.

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:**

1. ஜே.பி. பெஞ்சமின்,
   ஹுணுப்பிட்டிய ரோட், வத்தளை.
2. எல். மகேசன்,
   பூந்தோட்டம், வவுனியா.
3. வி. சாலினி
   கோதி லேன், திருகோணமலை.
4. ஏ. விஜயபிரபா,
   கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.
5. பி. செல்வராஜா,
   சிறுப்பிட்டி, நீர்வேலி.

படிப்பகம்




# தமிழ்க்கட்சிகளின் போக்கும் மக்களின் எதிர்பார்ப்பும்

யாழ் மாநகர சபையின் முதலாவது கூட்டம் கடந்த 24-04-98 வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் அமைந்துள்ள யாழ்மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

நீண்ட காலமாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட கூட்டுத் தலைமைத்துவமின்றி யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் அரச அதிகாரிகளாலேயே நிர்வகிக்கப்பட்டு வந்தது. இவற்றை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்பேற்று, மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவார்கள் என நடந்துமுடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வாக்களித்த மக்கள் நம்பியிருந்தனர்.

ஆனால், தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தேர்தல் முடிந்து 3மாதங்களாகியும் இன்னும் தமது கடமைகளை பொறுப்பேற்கவில்லை. தேர்தல் மூலம், உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிப்பதற்கான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டபின், அந்த சபையின் அங்கீகாரமின்றி அரச அதிகாரிகள் முன்பு போல வேலைத்திட்டங்களை நகர்த்த முடியாது.

இதனால், ஏற்கனவே இந்த சபைகளின் சகல பணிகளையும் நிறைவேற்றி, நிர்வகித்து வந்த அரச அதிகாரிகளும் எவ்வித பணிகளையும் மேற்கொள்ள முடியாத இக்கட்டான நிலை தோன்றியுள்ளது. இது "உங்கள் வாக்கு எங்களுக்கு... எங்கள் சேவை உங்களுக்கு" என தேர்தல் சமயத்தில் முன்வைக்கப்பட்ட கோசத்திற்கே மாறானது.

## புனரமைப்பே தேவை பெயர்சூட்டல் அல்ல

இது இவ்வாறிருக்க, கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்ட யாழ் மாநகர சபையின் முதலாவது கூட்டம், வாக்களித்த மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகளுக்கு மாறாக நடந்து முடிந்திருக்கிறது. தமிழ்க்கட்சிகளின் வரவை விரும்பாத அரசியல் சக்திகள், ஆரம்பத்திலிருந்தே எதிர்ப்பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருபவர்களின் வாய்க்கு அவல் கொடுத்தது போலவும் ஆகிவிட்டது.

இடங்களுக்கு பெயர்சூட்டுவது அல்லது மாற்றுவது, படங்கள் வைப்பது, சிலை நிறுவுவது- இவைதான் இவ்வளவு கால இடைவெளிக்குப் பின் தெரிவு செய்யப்பட்டிருக்கும் யாழ் மாநகரசபை மேயரும், உறுப்பினர்களும் செய்யவிருக்கும் சேவை. மக்களின் அத்தியாவசிய தேவையும் எதிர்பார்ப்பும் இதுதானா?

அழிந்து, உருக்குலைந்து போயிருக்கும் பொது இடங்களை புனர்நிர்மாணம் செய்வது, சீர்குலைந்த அல்லது பற்றாக் குறையாகவுள்ள அத்தியாவசிய சேவைகளை சீர்செய்வது பிரதானமானது. மேலும் இப்போது அவசியமானதும் உடனடியாக செய்து கொடுக்கப்பட வேண்டியதும், இந்த நெருக்கடியான நேரத்தில் மக்களுக்கு பயன்பாடு மிக்கதுமான பணிகளை மேற்கொள்வதை விடுத்து, அதற்காக திட்டமிடுதலை விடுத்து, படங்கள் வைப்பது பற்றியும் பெயர் சூட்டுவது பற்றியும் விவாதம் நடத்தி காலத்தை வீணடித்திருப்பது வாக்களித்த மக்களுக்கு மட்டுமல்ல வாக்களிக்காத சிலருக்கிருந்த நம்பிக்கையையும் சிதறடித்திருக்கிறது.

## மறக்கக் கூடாதது அவர்களதுகொள்கை

கட்சிப்பாகுபாடு இன்றி போராளிகள், தலைவர்கள், பொது சேவையில் ஈடுபட்டவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும், அவர்கள் நினைவுகூரப்பட வேண்டியவர்கள்என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. ஆனால், இந்த போராளிகள் தலைவர்கள் என்ன நோக்கத்திற்காக, எந்த மக்களின் நலனுக்காக தம்மை அர்ப்பணித்தார்களோ, அந்த மக்களுக்காக அவர்களைப் பின்பற்றி தொடர்ந்தும் உழைப்பதுவே, அந்தப் போராளிகளுக்கும், தலைவர்களுக்கும் செய்யும் அதியுயர்ந்த மரியாதையாகும். அது நடைமுறையில் கடினமானதும் ஆகும்.

அவர்களது கொள்கைகளை, நடைமுறைகளைக் கைவிட்டு, அவர்களது எண்ணங்களை, நோக்கங்களைச் செயற்படுத்த முடியாதவர்களாய் இருப்பது மட்டுமல்ல, அவர்கள் கனவு கண்ட தமிழர் தரப்பு ஒற்றுமை, கடைப்பிடித்த ஜனநாயக பண்புகளுக்கு முற்றிலும் மாறாகச் செயற்பட்டுக்கொண்டு அவர்களின் படம் வைப்பதும், பெயர் சூட்டுவதும், சிலை வைப்பதும் அரசியல் தெளிவு பெறாத மக்களைக் கவர, திசைதிருப்ப சுலபமான வழியாயிருக்கலாம்.

ஆனால்,அது மறைந்த தலைவர்களுக்கும், போராளிகளுக்கும் செய்யும் உரிய கௌரவமாகாது.

யாழ் மாநகரசபைக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஒரு அந்தத்திலிருந்து படம் வைப்பது பற்றியும் பெயர் சூட்டுவது பற்றியும் மக்களின் அத்தியாவசிய தேவைகளை மறந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் அதேவேளை-

மக்கள் மத்தியில் சிலர் மறு அந்தத்திலிருந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு அப்பாற்பட்ட விவகாரங்களை தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்த்து ஏமாந்து போமிருக்கிறார்கள்.

பி.பி.சி வானொலி சேவையின் "தமிழோசை" நிகழ்ச்சிக்கு பேட்டியளித்த அநேகர் உள்ளூராட்சித் தேர்தலின் பின், தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அதிகாரத்திற்கு வந்துவிட்டபோதும், இராணுவத்தினரின் சோதனைச் சாவடிகள்,சோதனைகள் யாவும் பழைய நிலையிலேயே இருப்பதாகவும், இவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை எனவும் தமிழ்க்கட்சிகளை குற்றம் சாட்டியுள்ளனர்.

இவை இன்று மக்கள் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினைகள்தான். ஆனால் இவை மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை போன்ற உள்ளூராட்சி சபைகளின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட பிரச்சினைகள். தமிழ்க்கட்சிகள் தவிர்ந்த வேறு யார் இந்த சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தாலும் கூட இதனை மாற்றிவிடமுடியாது. அவை வேறொரு தளத்திலிருந்து எதிர்த்துப் போராட வேண்டிய பிரச்சினைகள்.

## செய்ய வேண்டும் செய்வார்களா?

ஆனால் இந்த சபையின் அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு செய்யப்படக்கூடிய பணிகள் கூட இன்னும் செய்யப்படவில்லை என்பதே உண்மையில் குறைபாடாகும்.

வீதிகள், வடிகால்கள், குளங்கள், பாலங்கள், மற்றும் சேதமுற்ற பொதுக் கட்டிடங்களைப் புனரமைத்தல், புதிதாக நிர்மாணித்தல்....

நூலகங்கள், விளையாட்டுக் கழகங்கள், சிறுவர் பாடசலைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்பவற்றை பராமரித்தல், திறம்பட இயக்குதல் நிர்மாணித்தல்.

பொது சுகாதாரம் குடிநீர்வழங்கல் போன்றவற்றை சீரமைத்தல், திருப்திகரமான சேவையை வழங்குதல் போன்ற அத்தியாவசிய பணிகள் முதலில் மேற்கொள்ளப்பட வேண்டும். இன்னும் இதற்கு மேலும் முடிந்தளவு சமூகநலத்திட்டங்களை திட்டமிடுவதும், செயற்படுத்துவதும் சபைகளைப் பொறுப்பேற்றிருப்பவர்களின் திறமையை பொறுத்தது.

*- எல். சுந்தரலிங்கம்*

---

யாழ் மாவட்டத்தில் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட புளொட் அமைப்பினர், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன் வெளியிட்ட வாக்குறுதிகள் அடங்கிய தேர்தல் விஞ்ஞாபனம் இது:

01. நகரின் மையப்பகுதியை புனர்நிர்மாணம் செய்யும் நடவடிக்கையை உடன் ஆரம்பிப்போம்.
02. மருத்துவமனைகளில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகளைக் களைதல், உணவகங்களை சுகாதார விதிகளின்படி கண்காணித்தல், வீதிகளில் மிருகங்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துதல், வயோதிபர் பராமரிப்பு நிலையங்களை உருவாக்கி வயோதிபர்களின் நலன்களை பேணுதல், போதியளவு மலசலகூடங்களை அமைத்தல், வீதிகளைச் சுத்திகரித்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் நகரின் சுகாதாரத்தைப் பேணுவோம்.
03. மாநகரசபை எல்லைக்குள் பின்தங்கிய நிலையில் உள்ள குடும்பங்களின் பல்கலைக்கழக மாணவர்களிற்கான புலமைப்பரிசில் திட்டமொன்றை ஏற்படுத்துவோம்.
04. பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைக்க உதவுவதுடன் புதிய வீடமைப்புத் திட்டங்களை உருவாக்குவோம்.
05. அனைத்துக்குடியிருப்புகளுக்கும் மின்சாரம் வழங்குவதோடு திருப்திகரமான குழாய் நீர் விநியோகத்தை மாநகர் முழுதும் ஏற்படுத்திக் கொடுப்போம்.
06. போராட்டத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும் அங்கவீனர்களுக்கும் மறுவாழ்வு கிடைக்கக்கூடிய இல்லங்களை நிறுவுவோம்.
07. போரினால் விதவையானோருக்கு தொழில்வாய்ப்புகளைஉருவாக்கி உரிய நிவாரணம் வழங்குவோம்.
08. குடிசைக் கைத்தொழிலைப் பாதுகாத்து ஊக்குவிப்பதோடு சிறுவர் பாடசாலைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை சீரமைப்போம்.
09. பொதுமக்களுக்கான பேருந்து சேவைகளை அதிகரித்தல், பாடசாலை பேருந்து சேவைகளை சகல பகுதிகளுக்கும் ஏற்படுத்திக் கொடுத்தல், வயோதிபர் அங்கவீனர்களுக்கு காலை 10மணி தொடக்கம் மாலை 3மணிவரை இலவச பேருந்து பயணம் போன்ற நடவடிக்கைகளை மாநகர எல்லைக்குள் மேற்கொள்வோம்.
10. மீனவர்களின் அத்தியாவசிய தேவைகளை உணர்ந்து அவர்கள் முகம் கொடுக்கும் நாளாந்த பிரச்சினைகளுக்கு பொதுவானதும், நீதியானதுமான தீர்வைக் கண்டு, அவர்கள் வாழ்வை வளம்படுத்துவோம்.
11. மாநகரசபையின் தற்காலிக ஊழியர்கள் அனைவரையும் நிரந்தரமாக்க நடவடிக்கை மேற்கொள்வோம்.

யாழ் மாநகரசபைக்கு புளொட் அமைப்பின் சார்பில் போட்டியிட்ட 6உறுப்பினர்கள் வெற்றி பெற்று,சபையில் எதிர்க்கட்சியாகவுள்ளனர். மாநகரசபையின் முதலாவது அமர்வின்போது ஏகமனதாக நிறைவேற்றப்பட வேண்டுமெனக் கோரி அவர்கள் முன்வைத்த பிரேரணைகள் இவை :

01. தந்தை செல்வா நினைவுத் தூபி, கோட்டைப் பகுதி, மணிக்கூட்டுக் கோபுரப் பகுதி ஆகியன உள்ளிட்ட இடத்திற்குத் தந்தை செல்வாவின் பெயர் சூட்டப்பட வேண்டும்.
02. தந்தை செல்வா சதுக்கப் பகுதியில் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிர்நீத்த தியாகிகளின் நினைவுத் தூபிகளுடன், தமிழின விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த தலைவர்கள், தளபதிகள், போராளிகள், பொதுமக்கள்நினைவாக தூபிகள் அமைத்துப் புனிதமான நினைவிடமாக அப்பகுதி பாதுகாக்கப்பட வேண்டும்.
03. யாழ் துரையப்பா விளையாட்டரங்கு, திறந்தவெளி அரங்கு ஆகியவற்றுக்கு தந்தை செல்வாவின் பெயர் சூட்டப்பட வேண்டும்.
04. தந்தை செல்வா நூற்றாண்டு நிறைவை முன்னிட்டுத் தபால் முத்திரை வெளியிட நடவடிக்கை எடுக்கவேண்டும்.
05. யாழ் பொது நூலக புனரமைப்பு நடவடிக்கைகள் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும்.
06. யாழ் குருநகர் பகுதியில் அமைந்துள்ள சுவாமி ஞானப்பிரகாசர் சிலையைப் பொதுவான இடத்தில் அமைத்து, அவரின் ஞாபகார்த்தமாக கலாசார மண்டபம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
07. சுப்பிரமணியம் பூங்கா, நல்லூர் கிட்டு பூங்கா ஆகியன புனரமைக்கப்பட்டுப் பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட வேண்டும்.
08. யாழ் அரசதிணைக்களங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.
09. யாழ் மாநகர சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ள பத்திரிகையாளர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்.

---

## ஆயுத அரவம்

உழைப்பின் மிச்சம்
காணாமல் போக கடனாக
ஆசையாய் கட்டிய என்
அழகிய வீடு.
சேதமாக்கப்பட்டு ஜன்னவருகே
மண்மூடை
அதன் மேலே துப்பாக்கி.
ரோஜா வளர்ந்த இடத்தில்
களணி பூத்துக் கிடக்கிறது
என் கனவுகள் சிதைக்கப்பட்டு
அகதிகள் முகாமில் நான்.

தேங்காயாய் சொரிந்த என்
தோட்டம்
கீழே மினி முகாம்
மருந்துக்கும் குரும்பை இல்லை
ஆள் அரவம் இருந்தால்
தாவரங்கள் பூத்துக் குலுங்கும்
என்பர்
ஆயுத அரவம் இருப்பதாலோ-
அவை.
அப்படி கிடக்கின்றன!

-ஸ்ரனிஸ்

ஈ.பி.டி.பியின் பாராளுமன்ற உறுப்பினரும், தினமுரசு பத்திரிகையின் ஆசிரியருமாகிய ரமேஷ் என்று அழைக்கப்படும் நடராசா அற்புதராசா என்பவர் தினமுரசு என்ற ஈ.பி.டி.பி பத்திரிகையில் அற்புதன் என்ற பெயரில் "துரையப்பா முதல் காமினி வரை" என்ற ஓர் வரலாற்று நாவல் எழுதி வருகின்றார். அது வெறும் நாவலாக மாத்திரம் இருந்தால் பிரச்சினை இல்லை. ஏனெனில் நாவல் என்பது ஓர் புனைகதை மாத்திரம் தான்.

வரலாற்றுத் தகவல்களை வைத்து பல வரலாற்று நாவல்களும் இந்தியா, இலங்கையில் வெளிவந்துள்ளன. அவையும் கூட சில தகவல்களைத் திரட்டி அதற்கு மெருகேற்றி, மக்கள் சுவையுடன் வாசிக்கக் கூடிய நாவல்களாக வெளியிட்டு வருகின்றார்கள்.

அற்புதனும் அப்படியான தொடர் நாவலையே "துரையப்பா முதல் காமினி வரை" என்ற பெயரில் எழுதிவருகின்றார். ஆனால் அதனை நாவலாக இல்லாமல் உண்மையான வரலாறாக மக்கள் முன் காட்ட நினைப்பது கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாகும். அவரது தொடர் நவீனத்தில் உண்மைக்குப் புறம்பான பல தகவல்களை வெளியிட்டு வருவதுடன் பல அரசியல் கட்சிகளையும் கிண்டலும் கேலியும் செய்தே அது எழுதப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் பல வீடுகளில் கொள்ளையடித்தார்கள் என்ற காரணத்திற்காவும், சூளைமேட்டில் இந்தியத் தமிழர் ஒருவரைச் சுட்டுக் கொன்றார்கள் என்ற காரணத்திற்காகவும், மொத்தத்தில் பல கட்சி விரோத செயல்களில் ஈடுபட்டார்கள் என்ற காரணத்திற்காக டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ் முதலானோர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டனர்.

இதன் பின்னர் தமது பணத் தேவைக்காக சென்னையில் சிறுவன் ஒருவனைக் கடத்தியதால் தமிழ் நாட்டுப் பொலீசாரால் இவர்கள் கைது செய்யப்பட்டு, குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒரு வருடம் சென்னை மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள். ஒரு வருடத்தின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட இவர்கள், பிணையிலிருந்து தப்பி கொழும்பு வந்து அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவிடம் அடைக்கலம் தேடிக் கொண்டார்கள்.

இவர்களின் வரலாற்றை நன்குணர்ந்த பிரேமதாசா அவர்கள், இவர்களை தனது அடியாட்களாக பயன்படுத்திக் கொண்டார். இதற்காக கோடிக்கணக்கான பணமும் கொழும்பு "பாக் றோட்"டில் இவர்களுக்கு அலுவலகமும் வழங்கப்பட்டது. சொத்தி உபாலி போன்ற அடியாட்களை எவ்வாறு கோடீஸ்வரர்களாக மாற்றினாரோ அதனைப் போன்றே இவர்களையும் கோடீஸ்வரர்களாக்கி, இவர்கள் பத்திரிகை தொடங்கவும் ஏற்பாடுகள் செய்து கொடுத்தார்.

அதுமாத்திரமல்லாமல், இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருந்த யாழ் தீவுப்பகுதியை இவர்களின் குட்டி இராச்சியமாகவும், அதனை நிர்வகிக்க ஆயுத தளபாடங்களும் அள்ளிக்கொடுத்தார்.

அந்தக் குட்டி இராச்சியத்தில் இருந்து ஆளுக்கு 8-10 வாக்குகளுடன் 9 பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஐ.தே.கட்சி உருவாக்கிக் கொடுத்தது.

இவர்கள்தான் வரலாறு எழுதுகின்றார்கள் என்றால், இந்த வரலாறு எப்படி இருக்கும் என்பதை நீங்கள் யூகித்துக் கொள்ளலாம்.

பிரேமதாசாவுடன் பேச்சுவார்த்தை முறிவடைந்து 'ஈழப்போர் -இரண்டு' ஆரம்பமானதும், புலிகளுக்கெதிரான பிரச்சார யுத்தமொன்றை பிரேமதாசா அரசு வானொலியூடாகவும், 'லேக் ஹவுஸ்' பத்திரிகையான

# தினமுரசு ஆசிரியர் ரமேஷ் பிராயச்சித்தம் தேடுகின்றாரா?




தினகரன் மூலமாகவும் நடாத்தியது.

அப்போது புலிகளுக்கெதிரான மக்கள் குரல் என்ற வானொலிச் சேவையை தலைமை தாங்கி நடாத்தியவர் ரமேஷ் அல்லது அற்புதன் என்று அழைக்கப்படும் நடராசா அற்புதராசா தான். இவர்களுடன் இச்சேவையில் இணைந்து பணியாற்றிய கே.எஸ். ராஜா பின்னர் இவர்களாலேயே சயனைட் ஊட்டிக் கொலை செய்யப்பட்டார்.

அதனைப் போன்றே தினகரன் பத்திரிகையிலும், "அதிரடி ஜயாத்துரை" போன்று "புல்லட் பொக்ஸ்" என்ற பகுதியை இவர் எழுதிவந்தார். இவர்தான் இன்று தினமுரசின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்'டிலும், ஏனைய ஆக்கங்களிலும், புலிகளை புகழ்ந்துரைத்து வருகின்றார். இவர் எவ்வளவு பெரிய சந்தர்ப்பவாதியென்பதை இதிலிருந்தே புரிந்துகொள்ளலாம்.

இவர் தனது 252வது முரசில் எழுதிய 'துரையப்பா முதல் காமினி வரை' என்ற தொடரில், யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் ராஜனி திரணகமவை கொலை செய்தது ஈ.பி.ஆர்.எல்.எவ் என்றும், அச் சம்பவம் நடக்கும் போது புலி முக்கியஸ்தர் ஒருவர் அவ்வீதியால் போனதாகவும், சூட்டுச் சத்தத்தைக் கேட்டு அவர் விரைவாகக் போனதாகவும், இதனால் அவர்தான் சுட்டார் என புலிகள் மேல் பழி விழுந்ததாகவும், கதை அளக்கின்றார்.

முதலாவது இச்சம்பவம் நடக்கும்போது சென்னையில் குழந்தை கடத்தியதால் இவர்கள் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள்.

இரண்டாவது,செல்வக்குமார் என்ற ஒருவரே ராஜனிதிரணகமவின் கொலையைச் செய்ததாக இதே ரமேசும், டக்ளசும் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு அறிக்கை கொடுத்துள்ளார்கள். இச் செல்வக்குமார் என்பவரும் ஈ.பி.டி.பி.யின் ஓர் உறுப்பினர். உட்பிரச்சினைகள் காரணமாக இவர் ஈ.பி.டி.பியினரால் தாக்கப்பட்டார்.

இது தொடர்பாக இவர் கொழும்பு நீதிமன்றமொன்றில் வழக்கு தாக்கல் செய்ததுடன், சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட பல அரசியல் கட்சிகளுக்கும் தான் தாக்கப்பட்டதாக அறிவித்திருந்தார். இதுதொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை இவர்களை விசாரணைக்குட்படுத்திய போது ராஜனிதிரணகமவைக் கொலை செய்ததற்காகத்தான், தாம் இவரைத் தாக்கியதாக அவர்களுக்கு கூறியுள்ளார்கள்.

இவர்கள்தான் தினமுரசுப் பத்திரிகையில், கார்த்திக், தோமஸ் என்ற இரண்டு ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்கள் ராஜனி திரணகமவைக் கொலை செய்ததாகக் கதை அளக்கின்றார்கள். இக் கார்த்திக் என்பவரும், தனிப்பட்ட பிரச்சினையில் குத்திக் கொல்லப்பட்டாராம்.

அவர்தான் இவருக்கு இந்த உண்மைகளைக் கூறினாராம் என்று கொலை செய்யப்பட்டவன் மேல் பழியைப் போட்டு தப்பிக் கொள்ளப் பார்க்கின்றார்.

ஆனால் கே.எஸ். ராஜா எப்படி இவர்களால் கொலை செய்யப்பட்டாரோ அதனைப் போன்றே கார்த்திக்கையும் இயக்கத்துக்குள் எழுந்த பிரச்சினைகளால், திருகோணமலையில் வைத்து இவர்களது சகபாடிகளால் குத்திக் கொல்லப்பட்டார் என்பதே உண்மை.

இது ஒருபுறமிருக்க, யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் கல்வி கற்றவரும், புலிகளின் உறுப்பினருமாகிய மாணவனொருவன்,(இவர் புலிகளுக்கு உளவு வேலை பார்த்தவர்) ராஜனி திரணகம கொலை செய்யப்பட்ட பின்னர், மனமாற்றமடைந்து ராஜனி எப்படிக் கொல்லப்பட்டார் என்பதை, 'மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள்' அமைப்புக்கு எழுதியிருந்தார்.

வரலாறெரன்றை எழுதுவதாக கூறிக்கொள்பவர் குறைந்தபட்சம், இப்படியான தகவல்களையாவது திரட்டி இருக்கலாமே! புலிகள் கூட ராஜனியை தாம் கொல்லவில்லைஎன மறுத்துரைக்கவில்லை. இந்நிலையில் முழுப் பூசணிக்காயை சோற்றிற்குள் மறைக்கும் தேவை ரமேசுக்கு ஏன் ஏற்பட்டது?

புலிகளுக்கெதிராக வானொலிச் சேவை நடாத்தியதற்கு பிராயச்சித்தம் தேடிக்கொள்கின்றாரா? அல்லது புலிகளுக்கும் – ஈ.பி.டி.பி.க்கும் பாலம் போட முயற்சிக்கின்றாரா? என்பது அவருக்குத்தான வெளிச்சம்.

பாராளுமன்றஉறுப்பினரான ரமேஷ் அவர்கள், அரசின் தீர்வுத்திட்டத்தை திருத்த வேண்டும் என்பது பற்றியோ, அல்லது கொழும்பில் நடக்கும் கைதுகள் பற்றியோ அல்லது, வவுனியா அகதிமுகாம் பிரச்சினைகள் பற்றியோ, அல்லது யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் பற்றியோ பாராளுமன்றத்தில் வாய் திறந்துள்ளாரா? இல்லையேல், இவ்வளவிற்கும் காரணமாக இருக்கும் அவசரகாலச் சட்டத்தை இவரோ இவரது குழுவினரோ என்றாவது எதிர்த்ததுண்டா? பாராளுமன்றத்தில் இவர்கள் அரசுக்கு நல்லபிள்ளை.

ஆனால் "தினமுரசில்" அரசாங்கத்தை நார் நார்ராக கிழிப்பது. ஏன் இந்த இரட்டைவேடம்? அரசு தரும் 35 இலட்சம் நின்று விடும் என்ற பயமா?

பாராளுமன்ற உறுப்பினர் பதவிஎன்பது, மக்களுக்குசேவை செய்வதற்காக உருவாக்கப்பட்டது. இதுவரை மக்களுக்காக பாராளுமன்றத்தில் இவர்கள் என்ன சாதித்துள்ளார்கள்? அப்படி பாராளுமன்றத்தில் நம்பிக்கை இல்லை என்றால் ரமேஷ் தனது உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்யலாமே.

ஏன் இன்னும் பாராளுமன்றக் கதிரையில் தொங்கிக் கொண்டிருக்கிறார்? தன்னை, தனது கட்சியை திருத்த வக்கில்லாதவருக்கு, ஏனையோரைப்பற்றி எழுத என்ன யோக்கியதை உண்டு?

பத்திரிகை தர்மம் என்றால் என்ன என்பதை மறந்து, தமக்கிருக்கக்கூடிய ஜனநாயக சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்து, உண்மைக்கு புறம்பான விடயங்களை உண்மை போல் கொடுப்பதைப் போன்ற மோசடித்தனம் வேறில்லை.

அற்புதனின் வரலாற்றுத் திரிபுகளுக்கும், கடைந்தெடுத்த பொய்களுக்கும் பதில் எழுதும்படி எம்மைப் பலபேர் வற்புறுத்தியபோதும்கூட, வாராந்தம் இவருக்கு பதில் சொல்வது அநாவசியம் எனத் தவிர்த்து வந்தோம்.

இச் சிறு குறிப்பைக்கூட நாம் 'புதியகண்ணோட்டத்'தில் வெளியிடுவதற்குக் காரணம், எவ்வளவு தூரம் தினமுரசு பொய்களை வெளியிடுகின்றது என்பதை நீங்கள் புரிந்துகொள்வதற்கு மாத்திரமே அல்லாமல், தினமுரசுவிற்கு பதில் கூறுவதற்காக அல்ல. ●

## சார்ள்ஸ் அபேசேகர மறைவுக்கு அனுதாபம்

இந்த நாட்டில் தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரித்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த முற்போக்காளர்களில் ஒருவர் சார்ள்ஸ் அபேசேகர. இந்த நாட்டில் இனவாதத்திற்கெதிராகவும், மனித உரிமைகளை நிலைநாட்டவும், ஜனநாயகத்தை நிலைநிறுத்தவும் முன்னரங்கில் நின்று உழைத்தவர் அவர். மலையகப் பாட்டாளி மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு என்ன செய்யலாம் என்பதுபற்றி அல்லும் பகலும் அயராது சிந்தித்தவர். காணாமல் போதல், பாலியல் பலாத்காரம் போன்ற அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கெதிராக குரல் கொடுத்ததிலும், அதனை சர்வதேச அரங்குக்குக் கொண்டு சென்றதிலும், மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதிலும் 'சாளி'யை தலைவராய் கொண்டிருந்த நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் மறுக்க முடியாத பங்களிப்பை வழங்கியிருக்கிறது.



தெற்கில் காணாமல் போனவர்கள் தொடர்பாக தற்போது விசாரணைக் கமிஷன்கள் உருவாக்கப்பட்டதற்கும், கிருஷாந்தி பாலியற் படுகொலை விடயம் விசாரணைக்கு எடுக்கப்பட்டதிலும் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் நடவடிக்கைகளும் பங்களிப்பை வழங்கியுள்ளன. பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்சா படுகொலை, ரஜனி திராணகம படுகொலைகளைக் கண்டித்து இயக்கம் நடத்தி இந்த மோசமான படுகொலைகள் தொடர்பான தார்மீக அபிப்பிராயமும், கேள்வியும் சமூகத்தில் உருவாகப் பங்களிப்பு வகித்தது.

1981இல் யாழ்ப்பாணம் நகரம், நூல் நிலையம், பத்திரிகைக் காரியாலயம் ஆகியன எரிக்கப்பட்டபோது, 'யாழ்ப்பணத்தில் அரச பயங்கரவாதம்' என்ற பிரசுரத்துடன் அந்தப் பதற்றமான சூழ்நிலையிலும் வந்திறங்கியவர்கள் 'மேர்ஜ்' இயக்கத்தினர்.

எம்.டி.டி.ஆர்., எஸ்.எஸ்.ஏ. உட்பட பல்வேறு ஸ்தாபனங்களில் வேலைசெய்த சார்ள்ஸ் அபேசேகர அவர்கள் சிறந்த ஆய்வாளர், சிந்தனையாளர். எமது நாட்டின் பல்வேறு பிரச்சினைகள் பற்றி சமூக பொருளாதார ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை அவர் எழுதியுள்ளார்.

தனது இறுதிக் காலத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்ட யோசனைகளை எவ்வாறு செழுமைப்படுத்துவதென்பதில் அவர் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

அன்னாரின் மறைவுக்காக அவரது குடும்பத்தாருக்கும், அவர் தலைமைவகித்த நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் மற்றும் நிறுவனங்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



# வட-கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் நடக்குமா?

சாணக்கியன்











எதிர்வரும் ஜூன், ஜூலை மாதங்களில், மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தென் மாகாணம் தவிர ஏனைய மாகாண சபைகளின் கால எல்லைகள் முடிவடைவதாலேயே இத் தேர்தல் எதிர்நோக்கப்படுகின்றது.

வட-கிழக்கு மாகாணசபையும் 1990இல் பிரேமதாசா அரசால் கலைக்கப்பட்டதன் பின்னர் இதுவரை அதற்கான தேர்தல்கள் வைக்கப்படாமல் ஆளுனர் ஆட்சியின் கீழேயே கடந்த எட்டு வருடங்களாக இருந்து வருகின்றது. எனவே எதிர்வரும் ஜூன் மாதம் ஏனைய மாகாணங்களுக்கு தேர்தல் நடக்கும் போது வட-கிழக்கு மகாண சபைக்கும் தேர்தல் நடக்குமா? என்ற பெரிய கேள்வி எல்லோர் மனத்திலும் எழுந்துள்ளது.

குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈ.பி.டி.பி.யும், தேர்தல் நடந்தால் தாம் பங்குபற்றுவோம் என்பதை வெளிப்படையாகக் கூறியுள்ளார்கள். தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஏப்ரல் 5ம் திகதி செயற்குழுக் கூட்டத்தில், தாம் மகாணசபைத் தேர்தலை வைக்குமாறு கோரமாட்டோம் என்றும் ஆனால் வைத்தால் தாம் போட்டி இடுவோம் என்றும் முடிவெடுத்ததாக அதன் தலைவர் சிவசிதம்பரம் அறிவித்துள்ளார்.

இதேபோல், மகாணசபைத் தேர்தல் நடந்தால், தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்து வட-கிழக்கில் முதல்வராவதற்கு, தான் போட்டியிடுவேன் என டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.

இவை யாவும் இவர்கள் தேர்தலிலும், அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலும் எவ்வளவு அக்கறையாக உள்ளார்கள் என்பதையே துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது.

தேர்தலில் இவர்கள் காட்டும் அக்கறையில் ஒரு பகுதியை யாவது, தீர்வுத்திட்டத்தை திருத்துவதிலோ, தமிழ்க்கட்சிகள் ஐக்கியமாகச் செயற்படவேண்டுமென்பதிலோ, அல்லது தமிழ் மக்கள் கைதாவதை, அவர்கள் அனுபவிக்கும் கொடுமைகளை தடுக்க வேண்டும் என்பதிலோ காட்டவில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

இது ஒருபக்கம் இருக்க, வட-கிழக்கு மகாணசபைத் தேர்தல் நடக்குமா என்பதே பெரிய கேள்வியாக மாறியுள்ளது. வட-கிழக்கு மகாணசபைத் தேர்தல்களை நடாத்த அரசுக்கு பல இடைஞ்சல்கள் உள்ளன.

முதலாவதாக- நீதியான, நியாயமான, ஜனநாயகபூர்வமான தேர்தல் வட-கிழக்கில் நடாத்த முடியாது என்பது. நீதி, நியாயம், ஜனநாயகம் எல்லாம் வெறும் வெற்றுக் கோசங்கள் என அரசு நினைத்தால், தீவுப் பகுதியில் பாராளுமன்றத் தேர்தலை வைத்த மாதிரி ஓர் தேர்தலை நடாத்தி யாரையாவது முதல்வராக்கலாம்.

ஆனால் வட-கிழக்கில் தேர்தல் வைக்க அரசு விரும்புகின்றதா? என்பதை முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

வட-கிழக்கில் தேர்தல் நடந்தால், 13வது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்களை யாவது அம்மாகாணசபை நடைமுறைப்படுத்த முற்படும். இது இராணுவத்தினரின் யுத்தத்துக்கு பல இடைஞ்சல்களை உருவாக்கும். அதுமாத்திரமல்லாமல், சிவில் நிர்வாகத்தில் இராணுவம் தலையிடுவதிலும் சிக்கல்கள் ஏற்படும். இன்று சிவில் நிர்வாகம் என்பது பெயருக்கு இருந்தாலும், முழுமையாக இராணுவ நிர்வாகமே நடைபெற்று வருகின்றது.

எனவே மக்களால் தெரிவு செய்யப்பட்ட, அதுவும் ஓரளவு அதிகாரங்கள் கொண்ட ஓர் சபை உருவாவதை யுத்தம் நடக்கும் இக்காலகட்டத்தில் இராணுவம் விரும்பும் என்றில்லை.

இரண்டாவதாக, தற்பொழுது வட-கிழக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டே உள்ளது. (1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளது) எனவே தேர்தல் நடத்துவதாயின் இணைந்த வட-கிழக்கு மகாண சபைக்கே நடாத்த வேண்டும்.

இதனை முஸ்லீம் காங்கிரசின் தலைவர் அஷ்ரப் ஏற்றுக் கொள்வாரா என்பது அடுத்த கேள்வி. அஷ்ரப்பை பொறுத்தவரையில் வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டு இரு மகாணங்கள் ஆக்கப்படவேண்டும் அல்லது, கல்முனை, சம்மாந்துறை,பொத்துவிலை உள்ளடக்கி முஸ்லீம் மக்களுக்கு ஓர் தனி மகாணம் வேண்டும்.

இதற்கு தென்கிழக்கு மாகாணசபை எனவும் அவர் பெயர் சூட்டியுள்ளார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் சம்மதத்துடனேயே இது ஏற்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக தாம் ஓர் ஒப்பந்தத்தை செய்து கொண்டுள்ளதாகவும் இவர்கள் கூறுகின்றார்கள்.

இந்நிலையில் இணைந்த வட-கிழக்கிற்கான ஓர் மாகாணசபைத் தேர்தலை அஷ்ரப் ஏற்றுக் கொள்வது கடினமாகவே இருக்கும். ஏனெனில், மகாண சபை ஒன்றுஉருவாகினால் இணைப்பு என்பது இன்னும் பலமாகிக் கொண்டே போகும். இது அவர் எதிர்பார்க்கும் தென்கிழக்கு மாகாணசபை என்ற விடயத்தையும் எட்டாக் கனியாக்கிவிடும்.

அதுமாத்திரமன்றி, லலித் அத்துலத் முதலியின் மனைவியும், ஐ.தே.கட்சிக்கு ஆதரவாக மாறியுள்ள சூழ்நிலையில், அஷ்ரப்பை பகைத்துக் கொள்ள அரசு தயாராக இருக்காது.

மொத்தத்தில் வட-கிழக்கு மகாணசபைத் தேர்தலை நடாத்துவதற்கு இராணுவம், அஷ்ரப் போன்ற பல பகுதிகளில் இருந்தும் எதிர்ப்புகள் கிளம்பும் என்பதால், அரசு அத்தேர்தலை நடாத்த முயற்சிக்காது என்றே தோன்றுகின்றது.

இதேசமயம் இன்னோர் விடயத்தையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தம். டக்ளஸ் தேவானந்தா அவர்களும், தேர்தல் இல்லாமல் தனது தலைமையில் 'இடைக்கால நிர்வாக சபை வட-கிழக்கில் அமைக்க மிகவும் பிரயத்தனப்பட்டார்.

இதற்காக டெல்லிவரை சென்று, அப்போதைய பிரதமர் குஜ்ராலையும் பார்த்துப் பேசினார். ஜனாதிபதி சந்திரிகாவும் கூட பச்சை விளக்கு காட்டினார். ஆனால் உள்ளுக்குள் இருந்து வந்த எதிர்ப்பால் பின்னர் அது கைவிடப்பட்டது. ஒரு முறையாவது வட-கிழக்கிற்கு முதல்வராகி விடவேண்டும் என்ற டக்ளஸின் ஆசையும் அதனுடன் அடிபட்டுப்போனது.

அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடாத்தியபோது அசுக்கொரு தேவை இருந்தது. அதாவது, யாழ்ப்பாணத்தில் சுமுகநிலை திரும்பிவிட்டது, ஜனநாயக சூழல் வந்துவிட்டது என்பதை உலகுக்குக் காட்ட வேண்டிய தேவை இருந்தது. அதனாலேயே அத்தேர்தல்களை நடாத்தியது.

ஈ.பி.டி.பி.க்கும், கூட்டணிக்கும் தங்களது பலத்தைக் காட்ட வேண்டிய தேவை இருந்தது. அதனால் தமிழ் மக்கள் எக்கேடு கெட்டுப்போனால் என்ன, நாம் தேர்தலில் போட்டியிடுவோம் என முண்டியடித்தன. அதனாலேயே ஈ.பி.ஆர்.எல்.எவ்., தேர்தலை கூட்டாகப் பகிஷ்கரிப்போம் எனக் கோரிய போதும் அதனை மறுதலித்தன அக்கட்சிகள்.

ஆனால் தேர்தலுக்குப் பிறகு இதுவரை, தான் வெற்றியடைந்த பிரதேசசபைகளில் பதவிப் பிரமாணம் செய்யவோ அல்லது அதனை நடைமுறைப்படுத்தவோ முன்வராமல், இப்பொழுது மகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது பற்றி முண்டியடிக்கின்றது ஈ.பி.டி.பி. இதனால், இதுவரை சுமுகமாகநடந்துவந்த பிரதேசசபை நிர்வாகம் கூட அனாவசியமாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இதனால் கஷ்டப்படுவது மக்களே.

எனவே உள்ளூராட்சிசபைத் தேர்தல்களை நடாத்திய அரசு ஜூன்மாதத்தில் அல்லது ஜூலை மாதத்தில் ஏனைய மகாணசபைகளுடன் வட-கிழக்கு மகாணசபைத் தேர்தலை நடத்துமென்று இவர்கள் எதிர்பார்த்தால் அது பகற்கனவே.

# நடுநிலைமைக் கண்ணிலுள்ள கோளாறுகள்

தமிழ்க்கட்சிகள் விடும் தவறுகளை அவை திருத்தப் படவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக, மக்களின் நலனை அடிப்படையாக கொண்டு, அவற்றை விமர்சிப்பவர்கள் சுட்டிக்காட்டுபவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படவேண்டும், கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

தமிழ்க் கட்சிகளின் தவறுகளை பெரிதுபடுத்தி உள்நோக்கத்துடன் பயன்படுத்திக் கொள்பவர்களும் உண்டு. அவை மக்கள் நலனிலிருந்து எழுதப்படுவதுபோல் காணப்பட்டாலும் உள்நோக்கத்துடனேயே திட்டமிட்டு எழுதப்படுகின்றன.

தமிழ்க்கட்சிகள் யாழ் குடாநாட்டு மக்கள் மத்தியில் காலூன்றுவதை விரும்பாதவர்களால் அல்லது காலூன்றுவதை விரும்பாதவர்களை மகிழ்விப்பதற்காகவோ திருப்திப்படுத்துவதற்காகவோ அவை எழுதப்படுகின்றன. உண்மையில் தவறுகளை சுட்டிக்காட்டுபவர்களுக்கு மக்கள் நலன் ஒன்றே நோக்கமாயின், அத்தகைய தவறுகள் யாரால் இழைக்கப்பட்டாலும் அதனை சுட்டிக்காட்ட வேண்டும். கண்டிக்க வேண்டும். தமிழ்க்கட்சிகளின் தவறுகள் மட்டும்தான் அவர்களின் கண்ணுக்கு தெரிகிறதென்றால் கோளாறு உண்டு என்பதுதான் அர்த்தம்.

கடந்த 02-05-98 சஞ்சீவி பத்திரிகையில் 'அதிரடி அரங்கு' பகுதியில் எழுதப்பட்டுள்ள ஒரு பத்தியம், கையாளப்பட்டிருக்கும் எழுத்துநடை எழுதியவரின் நோக்கத்தை சந்தேகிக்க வைக்கிறது.

தமிழ்க்கட்சிகளில் ஒன்று செய்த தவறினை, தவறு செய்த கட்சி எது என்பதனை நன்கு தெரிந்திருந்தும், 'தமிழ்க்கட்சிகள்' என்று பொதுமைப்படுத்தி, தவறில் சம்பந்தப்படாத கட்சிகளுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் அது எழுதப்பட்டுள்ளது. ஒரு தமிழ்கட்சி பலவந்தமாக நிதி திரட்டுகிறது என்றால் அந்தக் கட்சியின் பெயரை குறிப்பிட்டு அதனை தட்டிக்கேட்க வேண்டியதுதானே? அதற்கு திராணியில்லாவிட்டால் ஒரு தமிழ் கட்சி செய்த தவறினை எல்லா தமிழ்கட்சிகளின் தலையிலும் சுமத்தி, எழுதியவரே மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தினை ஏற்படுத்தியபின் அந்த குழப்பத்தை போக்க எல்லா கட்சிகளும் அறிக்கை விடவேண்டும் என்று கோருவது என்ன நியாயம்?

'அரசியலில் கூட தமிழ்மக்களுக்காக ஒன்றுபடாமல் ஆளுக்கு ஒருபக்கம் இழுத்துப் பிடித்து அநாகரிக சுயலாப அரசியல் நடத்தும் நீங்கள் எல்லோரும் என்ன முகத்தோடு மக்களிடம் நிதி திரட்ட வருகிறீர்கள்?' என அதிரடி அரங்கில் எழுதியவர் கேள்வி எழுப்புகிறார். தமிழ்க்கட்சிகள் அநாகரிக சுயலாப அரசியல் நடாத்துகிறார்கள் என்பது உங்கள் சொந்தக் கருத்து. இதனை ஒட்டுமொத்தமான தமிழ் மக்களின் கருத்தாக சொல்ல முற்படுகிறீர்களே, இதுதான் மிகப்பெரிய பலாத்காரம். ஒரு கட்சி தனது தேவைகளுக்கு மக்களில்தான் தங்கியிருக்க முடியும். அவ்வாறு மக்களில் தங்கியிருப்பது புதுமையான ஓர் விடயமும் இல்லை. உதவுவதும் உதவ மறுப்பதும் அவரவர் சுதந்திரம்.

நிதி திரட்டுவதாயினும் வேறு எதுவாயினும் பலவந்தமாக கொள்ளப்படுவது தவறு என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது. நீங்கள் குறிப்பிடும் இந்த "ஒரு தமிழ்கட்சி"யாழ்ப்பாணத்தில் தமது செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னரே, இங்குள்ள வர்த்தகர்களை மிரட்டி பணம் வசூலிக்கப்படுவது இருந்து வருகிறது. பல வர்த்தகர்கள் செய்வதறியாது புங்குடுதீவுக்கும், வேறு இடங்களுக்கும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு போய் பணம் கொடுத்துவிட்டு வருகிறார்களே, அதுபற்றி நீங்கள் கேள்விப்படவே இல்லையா? அல்லது அது நன்கொடை என்று நீங்கள் வகைப்படுத்தி இருக்கிறீர்களா?

இல்லையெனில், 'நன்கொடை கேட்பதற்கு ஒரு முறை, நாகரீகம் உண்டு' என்று அவர்களிடம் ஏன் உங்களால் கூற முடியவில்லை? 'மிரட்டல் பாணியில் கேட்பது நன்கொடை அல்ல. இராணுவம் இதில் தலையிட்டு உங்களை அடக்காமல் நீங்கள் அடங்க மாட்டீர்களா?' என்று எழுதிப்பாருங்கள்.

'நன்கொடை கேட்பதற்கு நாகரீகம் வேண்டும். வர்த்தகர்கள் கொதித்தெழ வேண்டும்' என்று எழுதும் இதே பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கத்தில், '10ஆயிரம் ரூபா நிதி கொடுங்கள்!' என்று எழுதியபோது, எத்தனை வர்த்தகர்கள் பங்கரில் இருந்தார்கள். அப்போ 'நாகரிகமாக நிதி திரட்டுங்கள்' என்று ஒரு வரி எழுத வக்கில்லை, இப்போ வர்த்தகர்களுக்கு அறிவுரையா? அன்றைக்கு நடந்த கட்டாய வசூல்கள் மூலம் வர்த்தகர்கள் பாதிக்கப்படவில்லையா? இந்தச் சுமை மக்களைத்தான் அழுத்தவில்லையா? பரவாயில்லை, இப்போதாவது தவறுகளை கண்டு சீறும் உங்கள் உள உரத்தினை வரவேற்கிறோம். ஆனால் மிரட்டல், அடாவடித்தனம், எங்கிருந்து வந்தாலும் எதிர்த்து நில்லுங்கள். உங்கள் எழுத்துக்கு பெறுமதி இருக்கும்.

பலவந்தமாக நிதி திரட்டுவதை நியாயப்படுத்துவதற்காக இதனை எழுதவில்லை. சிலரின் பச்சோந்தித் தனத்தை சுட்டிக்காட்டுவதற்காகவே எழுத வேண்டியிருந்தது. பொதுமக்கள் இவர்களின் நோக்கத்தை புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக எழுதவேண்டியிருக்கிறது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்